1301

M. 2210

வருஷ சந்தா ரூ 1-8-0

வை. மு. கோதைநாயகி அம்மாள்.

# JEGAN MOHINI

# ஜகன்மோகினி

மலர் V Oct. 1928 இதழ் 11

5-DEC 1928



ஜகன்மோகினி ஆபீஸ்,
26 தோடித் தெரு,
திருவல்லிக்கேணி, மதராஸ்.

JL
182850

குறிப்பு:—ஒவ்வொரு மாதமும் கடைசித் தேதிக்குள் சஞ்சிகை வெளியாகும்.

## நமது சந்தா நேயர்கட்கு முக்கிய அறிவிப்பு

பிரதி ஆங்கில மாதமும் கடைசித் தேதியில் நமது பத்திரிகையை எல்லா சந்தா நேயர்களுக்கும் அனுப்புகிறோம். அங்ஙனமிருக்க சிலர் அடுத்த சஞ்சிகை வந்தபிறகு முன் மாதத்து சஞ்சிகை வரவில்லை யென்றும், நாம் அனுப்பத் தவறிவிட்டதாகவும் எழுதுகிறார்கள். இன்னும் சிலர் 2, 3 மாதங்கள் கழித்து சஞ்சிகை வரவில்லை யென்கிறார்கள். இது மிகவும் விசனிக்கத் தக்கதே. ஒரு மாதத்து சஞ்சிகை அடுத்த மாதம் 10 தேதிக்குள் உள் நாட்டு சந்தா நேயர்களுக்கும், 15 தேதிக்குள் வெளி நாட்டு சந்தா நேயர்களுக்கும் கிடைக்காவிட்டால் தபாலில் தவறிவிட்டதெனத் தெளிந்து உடனே நமக்குத் தெரிவித்தால் வேறு சஞ்சிகையை யனுப்புவோம். அப்படிச் செய்யாதவர்களுக்கு மூன்று அணா ஸ்டாம்பு அனுப்பினால்தான் வேறு சஞ்சிகை அனுப்பப்படும்.

நமக்கு எழுதும் கடிதத்தில் தங்களது சந்தா நம்பரை மறக்காமல் குறிப்பிடவேண்டும்.

இடம் மாறும் சந்தா நேயர்கள் புது விலாசத்தை உடனே நமக்குத் தெரிவிக்கவேண்டும். அப்படித் தெரிவிக்காததால் சஞ்சிகை தவறி விடின் அதற்கு நாம் ஜவாப்தாரியல்ல.

மானேஜர்:—:"ஜகன்மோகினி" ஆபீஸ்
திருவல்லிக்கேணி சென்னை

---


## "ஜகன்மோகினி"யின் முதல் இரண்டு ஆண்டுகளில் வெளிவந்த நாவல்கள்

மலர் I. ஸ்ரீமான் வடூவூர் கே. துரைசாமி அய்யங்கார் எழுதிய
காளிங்கராயன் கோட்டை ரகசியம் (2-பாகங்கள்) ரூ. 4 0 0

மலர் II. விலாஸவதி (2.பாகங்கள்) ரூ. 3 0 0

ஸ்ரீமான் அ. முத்துகிருஷ்ணன் எழுதியவை.

| | | |
|---|---|---|
| கனக சபை | ... ... | ரூ. 1 8 0 |
| கோகிலம் | .... ... | ரூ. 0 6 0 |

"ஜகன்மோகினி" ஆபீஸ்
26, தேரடித் தெரு
திருவல்லிக்கேணி, சென்னை.

# முக்கிய அறிவிப்பு.

அன்பார்ந்த சகோதர சகோதரிகளே!

நாம் முன்னர்த் தெரிவித்தபடியே நமது புதிய நாவலாகிய **கௌரீ முகுந்தன்** வெளியாகிவிட்டது. முன்பண மனுப்பிய நேயர்களுக்கும், வி. பி. யிலனுப்பக்கோரிய நேயர்களுக்கும் புத்தக மனுப்பியாய்விட்டது. நமது நேயர்களில் ஏனையோரும் மன மொத்துத் தமது ஆதரவை எமக்களித்து இப்புதிய புத்தகத்தை வரவழைத்துக் கொள்ளுமாறு வேண்டுகிறோம்

அடுத்த ஆண்டு முதல் நமது ஜகன்மோகினியின் பக்கங்களை அதிகப்படுத்த வேண்டுமென்றும், அவ்விதம் செய்வதற்குச் சந்தாவை அதிகப்படுத்தினாலும் தாம் உதவி புரிவதாகவும் பல சகோதர சகோதரிகள் எமக்குத் தெரிவித்துள்ளார்கள். அவர்களின் விருப்பத்தின்படியே நாம் அடுத்த ஆண்டுமுதல் பக்கங்களை அதிகப்படுத்த உத்தேசித்திருக்கிறோம். அதனால் நமக்கு அதிக மான பணச்செலவுண்டாகுமென்பது நமது நேயர்களறிந்த விஷயம். **“குறைந்த சந்தாவில் நிறைந்த பக்கங்கள் வெளியிட வேண்டுமென் பதே நமது நோக்கம்”** என்று ஏற்கெனவே நாம் தெரிவித்துள்ளபடி எமக்குச் சந்தாத் தொகையை அதிகப்படுத்துவதற்குப் பிரியமில்லை. ஆகையால் தற்போதுள்ள குறைந்த சந்தாவாகிய ரூ 1-8-0க்கே பக்கங்களை அதிகப்படுத்தி நமது சந்தா நேயர்களின் ஆவலைப் பூர்த்தி செய்யத் தீர்மானித்துள்ளோம்.

ஆதலால் அதிக சந்தாப் பணம் கொடுப்பதற்குப் பதிலாக இப்போதுள்ள நமது நேயர்கள் எல்லோரும் தமது சந்தாத் தொகையை முன் பணமாக அனுப்பி உதவி புரிவதுடன் ஒவ்வொரு வரும் குறைந்தது இரண்டு நண்பர்களையாவது சந்தாதாரர்களாக சேர்த்துப் பரோபகாரத்தைச் செய்து நமது மோகினிச் செல்வியைக் கைவிடாது ஆதரிக்கவேண்டுமாய் மிகவும் வணக்கமுடன் கேட்டுக் கொள்கிறோம்.

புத்தகத்தையோ சஞ்சிகையையோ, வி. பி. யில் அனுப்புவ தென்றால் தங்களுக்கு வீணாக ஆகும் பண நஷ்டத்துடன் எமக்கும்

சிறிது கஷ்டமும் ஏற்படும். ஆகையால் நேயர்கள் பணத்தை மணியார்டரின் மூலமே அனுப்பித் தமது கஷ்டத்தையும், எமது கஷ்டத்தையும் நிவர்த்தி செய்யுமாறு வேண்டுகிறோம்.

நமது மோகினியின் 11வது சஞ்சிகை எதிர்பாராது அச்சாபீஸில் அச்சு யந்திரம் கெட்டுவிட்டதனாலும், ஆள்கள் சரிவர வாராமையினாலும் சில தினங்கள் தாமதமாகிவிட்டது. இதுபற்றி நாம் வருந்துகிறோம். இத்தாமதத்தைக் குறித்து நேயர்கள் அனைவரும் மன்னிக்கும்படி கேட்டுக்கொள்கிறோம். அடுத்த 12வது இதழை எம்மால் கூடியவரையில் 30-ந் தேதி யன்று வழக்கம் போல அனுப்பி விட ஏற்பாடு செய்கிறோம். ஒருசமயம் இந்த மாதம்போல எதிர்பாராது தாமதமாகுமாயின் அதைக் குறித்தும் மன்னிக்கவேண்டுமாய்க் கோருகிறோம்.

தங்கள் சகோதரி,

**வை. மு. கோதைநாயகி.**

---

சீவகசிந்தாமணி வசனம், அரிச்சந்திர புராண வசனம் முதலிய பல நூல்களின் ஆசிரியராகிய

**செம்பூர் வீ. ஆறுமுகஞ் சேர்வையார் அவர்கள்**

**இயற்றிய மதிப்புரைச் செய்யுட்கள்.**

1. சீதைநா யகன்கமல மலர்ப்பதத்தைச் சிந்தித்துத் தினமும் வாழும்
கோதைநா யகியாஞ்ச கோதரிநன் மதிநுட்பங் கொண்டு செய்த
காதைநா யகசௌரி முகுந்தனெனு மிப்பனுவல் களிப்பு மேவிப்
போதைநா யகநாய கிகள்தன்கு போக்கும்வகை புரியு மாதோ.

2. மாதருக்கு மாடவர்க்குஞ் சிறுவருக்குஞ் சிறுமியர்க்கு மதியை யூட்டித்
தீதகற்று மீகையன்பு தெய்வபக்தி முதலியன சிறக்கச் செய்யும்
போதமுற்ற தமிழினிமை புவியெங்கும் பாவும்வகை புரியு நல்ல
நீதமிக்க வரசர்செங்கோன் முறைவிளக்கு நிதியுதவி நிலவு மீங்கே.

3. கற்பினுயர் வினைக்காட்டுங் களங்கமற்ற நட்பினலங் காட்டு மென்றும்
பொற்புமிகு மில்லறத்தார் போற்றுகின்ற நன்னெறிகள் புகலு நெஞ்சில்
நற்குணங்கொண் டேநன்றி மறவாதார்க் குறுமேன்மை நவிலு நாட்டின்
அற்புதங்கள் பலகாட்டு மிலமீசை யிதன்பயன்கட் களவின் றம்மா!

# முக்கிய எச்சரிக்கை.

விருது நகரில் நமது ஏஜன்டாக விருந்த Mr P. பழனிக் குமரு பிள்ளை நமக்குச் சேரவேண்டிய பணத்தை அனுப்பாமல் ஒழுங்கீனமாக நடந்து கொண்டிருப்பதால் அவரை ஏஜன்டு பதவியிலிருந்து நாம் விலக்கிவிட்டோம். இனி அவரிடம் யாரும் நமக்காகப் பணம் கொடுக்க வேண்டாமென்று எச்சரிக்கிறோம்

சஞ்சிகையோ புத்தகங்களோ வேணடியவர்கள் நமக்கு நேரிலேயே பண மனுப்பிப் பெற்றுக்கொள்ளும்படி கேட்டுக்கொள்கிறோம்.

மானேஜர்.

ஜகன்மோகினி ஆபீஸ்.

திருவல்லிக்கேணி.

---

## காலண்டர் வரவு.

### இரங்கூன் நவீன கதா புத்தக சாலையின்

### 1929ம் வருஷத்திய நவீன காலண்டர்.

மேற்கண்ட புத்தகசாலையார், அனுப்பிய இருவகைக் காலண்டர்கள் நமக்குக் கிடைத்தன. அவைகளில் ஒன்று, இங்கிலீஷ், அறபிக், தமிழ் ஆகிய மூன்று தேதிகளைக் காட்டக்கூடியது; மற்றொன்று, இங்கிலீஷ், உருது, தமிழ் ஆகிய மூன்று தேதிகளைக் காட்டக்கூடியது.

இருவகை காலண்டர்களும், ஆறுக், கலர்களில் அச்சிடப்பட்டிருக்கின்றன. ஒவ்வொரு மாதத்தின் தலைப்பிலும் பற்பல இஸ்லாமிய புண்ணிய க்ஷேத்திரங்களின் படங்கள் பதிப்பிக்கப்பட்டிருக்கின்றன. படங்களின் இருபக்கங்களிலும் அவற்றின் பெயர், விசேஷங்கள் முதலியவை எடுத்துக் காட்டப்பட்டிருக்கின்றன.

மாதத்தின ஒவ்வொரு பிரதியிலும், மத சம்பந்தமான மிக அருமையான வாக்குகள், குர்ஆனிலிருந்தும், நபீ திருவாக்குகளிலிருந்தும் எடுத்து எழுதப்பட்டிருக்கின்றன. இஸ்லா மத புண்ணிய ஆத்மாக்களின் ஜனன, மரண சம்பந்தமான தேதிகள் ஆங்காங்குக் குறிப்பிடப்பட்டிருக்கின்றன.

பதிப்பு மிக அழகாயும், சுத்தமாயும் உயர்ந்த காகிதத்தில் அச்சிடப்பட்டிருக்கிறது.

இவற்றில் இஸ்லாமியர், கிறிஸ்தவர், ஹிந்துக்கள், ஆகியவர்களின் உத்ஸவதினங்கள், பண்டிகைகள், நல்ல நாள், கரிநாள் முதலியவைகளும் சுட்டிக் காட்டப்பட்டிருப்பதால் இந்தக் காலண்டர்கள் இஸ்லாமியருக்கு மட்டுமல்ல, பொதுவாய் எல்லா மதஸ்தருக்கும் மிக்க உபயோகமானவைகளே.

இந்தக் காலண்டர்களை உபயோகிக்கிறவர்கள் மாத முடிவானதும் பிரதிகளை எடுத்துவிடமாட்டார்கள். பக்திக் கடுத்த அருமையான பிரசங்கங்கள் ஒவ்வொரு மாதத்திலும் எழுதியிருக்கிறபடியால் மிகப் பத்திரமாய் வைத்திருப்பார்கள் என்று நம்புகிறோம். இவற்றை மேற்படி புத்தகசாலையார் நமக் கனுப்பினதற்காக வந்தனம் கூறுகிறோம். இவற்றின் கிரயம் காலண்டர் ஒன்றுக்கு ரூபாய் ஒன்று எனத் தெரிகிறது. வேண்டுவோர், "நவீன கதா புத்தகசாலை, இரங்கூன்" என்ற விலாசத்துக்கு எழுதித் தருவித்துக்கொள்ளவும்,

## கெட்டி சாயம்! உயர்ந்த உடை!! விலை நயம்!!!

உயர்தரமான பம்பாய் கெட்டிச் சாயமுள்ள

# கலர் புடவைகள்

இவைகள் தினந்தோறும் தோய்த்து அணியத் தக்கவை. கெம்புரோஸ், ஆரஞ்சு, பச்சை, சாக்லேட் நிறங்களில் கிடைக்கும். பெண்மணிகளைத் திருப்திப்படுத்த பளபளப்பும் வசீகரத்தோற்றமும் கொண்ட இவ்வாடைகளை வாங்குதலே சரி.

அளவு 18 × 2¾ முழங்கள்.

**முதல் ரகம்** விலை ரூ. 5-8-0 **2-வது ரகம்** ரூ. 4-8-0

பூக்கொடிக்கரை நெய்து முந்தாணியில் பூவேலை செய்திருக்கும் உருப்படி 1-க்கு ரூ. 1-8-0 அதிகம்.

# ஜர்மன் சில்க் புடவைகள்

**சாதா:** மயில் கழுத்து, பொன் வண்டு, மேகவர்ணம், மாந்துளிர், பச்சை, அரக்கு, கருப்பு முதலிய எல்லாக் கலர்களிலும் கிடைக்கும். பெங்களூர் முந்தானி போட்டது. கலர் கெடாதது. மனோகரமான மழமழப்பு. பளபளப்பு மாறாதது. ரம்மியமான தோற்றமுள்ளது. நேர்த்தியான நெசவு கொண்டது. நீடித்து நிற்பது. உறுதியானது.

18 × 2¾ முழங்கள் விலை ரூ. 11-8-0
ரவிக்கை துண்டு 1-க்கு 0-11-0

**கோட்டடி:** கரைகளில் பேட்டு வைத்து உடலில் பவழக் கொடி, தந்திக் கம்பி, டில்லி தர்பார் முதலிய தினுசுகள்.

18 × 2¾ விலை ரூ. 12-8-0
ரவிக்கை 1 முழம் 0-12-0

மேற்படி பிளேன், கொட்டடி தினுசுகளில் ருத்திராக்ஷப் பேட்டு வைத்து தலைப்பிலும் ஜரிகை (கருக்காதது) வேலை செய்ய உருப்படி 1-க்கு 3-0-0 அதிகம்.

குறிப்பு.—உத்தம உடைகளுக்கு உத்தரவாதம். ஆகவே நல்ல சரக்குகளை இங்கேயே வாங்குங்கள். ஆர்டருடன் கால் பங்கு முன் பணமனுப்புக. தபால் கூலி வேறு.

ஒரே சமயத்தில் 100 ரூபாய் சரக்கு வாங்குபவற்கு 1 ரூபாய்க்கு 0-1-6 வீதம் குறைக்கப்படும்.

**ஸிட்டி நெசவுச் சாலை,**
65, அரமனைக்கார வீதி,
ஜி. டி. சென்னை.

ஏஜண்டுகள் தேவை.

# திகம்பர சாமியார் பால்ய லீலை

## இரண்டு பாகம் விலை ரூபா 5-0-0

இது எத்தனையோ அற்புதமான நாவல்களை எழுதித் தங்கமெடல்களும் நற்புகழும் பெற்றுள்ள நூலாசிரியரான நமது வடுவூர்-கே. துரைசாமி **அய்யங்கார்** அவர்கள், B. A, யால் எழுதப்பட்டது. மேற்படி நூலாசிரியர் எழுதி, எழுதி அநுபவ முதிர்ச்சியும் கைதேர்ச்சியும் பூரணமாகப் பெற்றிருக்கும் பரி பக்குவ நிலைமையில் சமீபகாலத்தில் இந்த நாவல் சுயமாக எழுதப் பெற்ற தாகையால் புஸ்தகத்தில் இரண்டொரு வரிகளைப் படிக்கத்தொடங்கும் பொழுதே தேனும் அமிர்தமும் ஊறுமென்பதில் ஐயமே இல்லை. மேற்படி யாரால் இது வரையில் எழுதப்பட்டுள்ள அருமையான நாவல்கள் யாவற்றி ற்கும் இது சிரோரத்னம்போல் விளங்கும் மாண்புடையது. இந்த புஸ்தகத் தைக் கையிலெடுப்போர் கதை முடிகிற வரையில் ஊணுறக்கம் முதலிய எவ்வித தேகபாதைகளுமற்ற தேவர்கள்போல ஆநந்த சாகரத்திலாழ்ந்து மெய்மறந் திருப்பாரென்பதை நாம் இவ்விடத்தில் முக்கியமாய் எடுத்துச் சொல்ல வேண்டியிருக்கிறது. இந்த இனிமையான நூலின் பெயரையும் இதன் ஒவ் வோர் அதிகாரத்திற்கும் கொடுக்கப் பட்டிருக்கும் பெயரையும் வாயால் உச்சரிக் கும்பொழுதே மனம் பூரித்துச் சந்தோஷ நிறைவையடையும்.

---

புதிய ஸங்கீத புத்தகம்! இப்பொழுது வெளிவந்தது !!

## ராமுலு கீர்த்தன ரத்னங்கள் ரூபா 1-4-0

இதில் மகான்களாகிய ஸ்ரீ த்யாகராஜ ஸ்வாமிகள், முத்து ஸ்வாமி தீக்ஷிதர், ஸ்ரீ ஜயதேவர், புரந்தர விட்டலர், பட்டணம் சுப்ரமண்ய அய்யர், முதலாக 50 பூர்வீக வித்வான்காளாலியற்றப் பெற்ற தெலுங்கு, ஸம்ஸ்க்ருதம், கன்னடம், தமிழ் முதலிய பாஷைகளிலுள்ள கீர்த்தனங்களும், ஜாவளிகள் பதங்கள், கீத கோவிந்தம், சித்தர் பாட்டுகள் முதலியனவும், நந்தனார் சரித்திரக் கீர்த்தனைகள், பாரதக்கீர்த்தனைகள், ராமாயணக் கீர்த்தனைகள் முதலியனவும், இன்னும் தற் காலத்தில் காலக்ஷேபங்களிலும், கச்சேரிகளிலும், பாடும் அநேக சில்லறைப் பாட்டுகளும், தேவாரங்கள், காவடிச்சிந்து, திருப்புகழ், அருட்பா, பூசாரிப்பாட்டு முதலியனவுமாக 300 கீர்த்தனங்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு, ராகதாள குறிப்பு களுடன் பிழையின்றி நேர்த்தியான கடிதத்தில் அழகாய் அச்சிடப் பட்டிருக் கின்றன. சகலவிதமான ஸங்கீதாபிமானிகளின் கோறிக்கையைப் பூர்த்தி செய்ய, சகல விதமான கீர்த்தனங்களும், பாட்டுகளும் இதில் சேர்க்கப்பட்டிருப் பதால் ஸங்கீதாபிமானிகளுக்கு இது ஒரு ஸங்கீதக்களஞ்சியம் என்பது நாம் சொல்லாமலே விளங்கும்.

எம். எஸ். ராமுலு அண்டு கம்பெனி.

ஸங்கீத புத்தக வியாபாரிகள்,

10, கல்மண்டபம் ரோட், இராயபுரம், மதறாஸ்.

# ராமுலு புதிய ஸங்கீத பிரசுரங்கள்

ஸங்கீத ஸாஹித்ய பரத சாஸ்த்திர வித்வான் பிரம்மஸ்ரீ
கெ. வி. ஸ்ரீநிவாஸ அய்யங்காரவர்களால்

அநேக சீர்திருத்தங்களுடன் புதியதாய் தயாரித்த அரிய புத்தகங்கள்.

**1. ஸங்கீத சிந்தாமணி** ரூபா 3-0-0

இதில் மகான்களாகிய ஜயதேவர், புரந்தர விட்டலர், தியாகராஜ ஸ்வாமிகள் முதலிய வித்வான்களா லியற்றப்பட்டு பிரசித்தி பெற்றிருக்கிற தெலுங்கு, ஸம்ஸ்க்ருதம், கன்னடம் முதலிய பாஷைகளிலுள்ள கீர்த்தனைகளும் ராகமாலிகைகளும், பற்பல அரிய ராகங்களை வாசிப்பதற்குரிய அனேக குறிப்புகளும் மற்றும் ஸ்வர தாளங்களுடன் அடங்கியிருக்கின்றன. எல்லாம் புதிய விஷயங்கள்.

**2. திராவிட கானம்** ரூபா 3-0-0

இப்படிப்பட்ட புத்தகம் இதுவரையில் வெளிவந்ததே இல்லை. இதில் அடங்கி யிருக்கிற எல்லாப் பாட்டுகளும் தமிழே. தமிழ் நாட்டில் பிரசித்தி பெற்ற அனேக வித்வான்களுடைய கீர்த்தனங்களும் மற்றும் ஸ்வர தாளங்களுடன், இதில் அகப்படுமென்றால் இப்புத்தகத்தைப்பற்றி வேறென்ன சொல்வது? இப்புத்தகத்தைப் பார்த்தவர்கள் தமிழ் நாட்டில் இவ்வளவு அரிய பாட்டுகள் இருந்தனவோ என்று ஆச்சரியப் படாதிருக்க முடியாது.

**3. ஸங்கீத சில்லறைக் கோர்வை** ரூபா 3-0-0

இதில் பல்லோர் கீர்த்தனங்கள், சிந்துக்கள் தெம்மாங்குகள், சித்தர் பாட்டுகள், அருட்பா, முத்துவிராயி பாட்டு, பரிகாசப் பாட்டு, பூசாரிப்பாட்டு, முதலிய பற்பல சில்லரைப் பாட்டுகள் ஸ்வர தாளங்களுடன் அடங்கியிருக்கின்றன. இதைப்போலொரு புத்தகம் இதுவரை வெளிவந்ததே யில்லை.

இவ்வரிய புத்தகங்கள் இதுவரையிலும் ஸங்கீத உலகத்திற்குத் தெளிவாய்க் கிடைக்காத அனேக விஷயங்களையும் அரிய பெரிய பாட்டுகளையும் வழங்கவல்ல தென்றால் இப்புத்தகங்கள் ஸங்கீதாபிமானிகட்கும் ஸங்கீத உபாத்தியாயர்கட்கும் ஒரு பெரிய நிதியாகுமென்பதை நாங்கள் எடுத்துக்காட்ட வேண்டியதில்லை.

குறிப்பு.—மேற்குறித்த மூன்று புதிய ஸங்கீத புத்தகங்களின் முழு விபரமான கீர்த்தனங்களின் அட்டவணையுடன் கூடிய கேட்லாக்கு, தேவையானவர்கட்கு இனமாய் அனுப்பப்படும்.

எம். எஸ். ராமுலு அண்டு கம்பெனி,
ஸங்கீத புத்தக வியாபாரிகள்,
10, கல்மண்டபம் ரோட், இராயபுரம், மதராஸ்.

## 13—வது அதிகாரம்

### அமிருத மொழியும்—ஆவல் நிறைவும்

அப்படி வந்த மனிதர் தமது ஜேபியில் செருகியிருந்த பணப் பையை எடுத்து அந்த மின்னாளின் கரத்திலளித்து அவளை யோர் விதமான துர் எண்ணங்கொண்ட காமப் பார்வையால் பார்த்தார். அந்தப் பார்வையினால் அம்புஜம் அவர் மீது அருவையையும், சலிப்பும் கொண்டவளாய்ப் பணப் பையை எடுத்துத் தன் மடியில் வைத்துக்கொண்டு, அவரை நோக்கி, "ஐயா! தமக்கு மிகுந்த வந்தனம்; தங்களுக்கு ஈசன் கருணை புரிவாராக" என்று கூறிப் பின் அங்குப் போடப்பட்டிருந்த கட்டிலினருகில் சென்று அதை மூடியிருந்த ஓர் துணியை விலக்கி விட்டு, "ஐயா! இங்கு வந்து தங்கள் இஷ்டத்தைப் பூர்த்தி செய்து கொள்ளலாம்" என்று கூறியவாறு தான் சற்று விலகிக்கொண்டாள்.

அவள், ஐயா வென்று அழைத்தவுடனே அந்த மனிதர் அளவிலாப் பூரிப்பையும், உற்சாகத்தையுமடைந்து, வெகு விரைவில் எழுந்து ஆநந்தத்துடன் கட்டிலினருகில் சென்றார்; அந்தக் கட்டிலின் மீது துணிவிலக்கப்பட்ட விடத்தைக் கவனித்தார்; அங்கு ஓர் பீங்கானாலாகிய பெரிய தட்டு நிறைய அறுக்கப்பட்டுள்ள மாமிசமும், மற்றொரு தட்டில் சில எலும்புகளும், தோலும், இன்னொரு தட்டில் உதிரமும், சீழும் கலந்து வைக்கப்பட்டிருந்தன. இந்த ஆபாச வஸ்துக்களைக் கண்டதும் அந்த மனிதருக்குண்டான அருவருப்புக்களவில்லை. அவற்றிலுண்டாகும் துர்க்கந்தமான வாடையொருபுறம் வீசித் தாங்க வியலாத வேதனையை யுண்டாக்கிக் கொண்டிருந்தது. அம்மனிதர் அவற்றைப் பார்த்தவுடனே, "இங்கு நம்மை யழைத்து இவள் இத்தகைய ஆபாசவஸ்துக்களை நமக்குக் காட்டி, 'உங்கள் இஷ்டத்தைப் பூர்த்தி செய்து கொள்ளுங்கள்' என்று கூறித் தான் விலகி நிற்கும் கருத்து யாது? இதென்ன இது! ஒன்றும் விளங்காத மோசமாக விருக்கின்றதே" என்று தமக்குள்



18850

எண்ணி வியப்பும், திகைப்பு மடைந்த பார்வையோடு, அம்புஜத்தை நோக்கி, ஒரு விதமான நகைப்பு நகைத்துக் கொண்டே, "என் கண்ணினுள்ளிருக்கும் கருமணிபோன்ற காதல் கிளியே! ஈதென்ன விந்தை! என்னையன்புடன் அழைப்பது போல அழைத்து எனக்கு இவற்றைக் காட்டி, 'உங்களிஷ்டத்தைப் பூர்த்தி செய்து கொள்ளலாம்' என்று கூறினையே! இது உன்னுடைய அற்புத லீலைகளில் ஒன்றோ!" என்று கூறியவாறு சென்று அவளை ஆலிங்கனம் செய்து கொள்ள முயன்றார்.

இதைக் கண்ட அம்புஜமென்னும் மாது, "ஆகா! நீங்கள் அவசரப்படவேண்டாம்; சற்று நிதானியுங்கள்; தாங்கள் என்னைத் தேடி வந்த எண்ணம் யாது? முதலில் அதைத் தெரிவியுங்கள்; பின்னர் அதற்குத் தக்க பதிலை யானுரைக்கின்றேன்" என்றாள்.

வந்த மனிதர்:—(முன்னமர்ந்த ஆசனத்தில் அமர்ந்து பின்) "ஆகா! இதென்ன புதிதாக ஏதோ விளையாட்டுப் பிள்ளைகளைக் கேட்பது போல இக் கேள்வியைக் கேட்கின்றாயே! நான் வந்த காரணத்தை நீயறியாயோ! உனக்கது நன்றாய்த் தெரியுமே; அப்படியிருக்க நீ ஒன்றும் தெரியாதவள் போல் இக் கேள்வியைக் கேட்பது அதிசயமாயிருக்கின்றது; நான் உன்னுடைய இன்ப சுகத்தை யனுபவிக்கக் கோரியே வந்தவனென்பதை வெளிப்படையாகக் கூறவேண்டுமா! நீ பேசுவதே ஓர் நூதனப் பேச்சாக விருக்கின்றதே!" என்றார்.

அம்புஜம்:—"நான் காரணமில்லாமல் தங்களிடம் இக் கேள்வியைக் கேட்கவில்லை. சிலர் என்னை, அவர்கள் வீட்டுக்கு சங்கீதக் கச்சேரிக்குஅழைக்க வருவார்கள்; சிலர் தாங்கள் கூறிய கருத்துடன் வருவார்கள்; அவைகளில் தாங்கள் எதையுத்தேசித்து வந்திருக்கின்றீர்கள்என்பதை யான் முதலிற் கவனித்தபோது தங்களுடைய பார்வையால் தாங்கள், என் மீது கேவலமான இச்சை கொண்டிருக்கிறீர்களென்பது விளங்கிற்று; அந்தத் தீய எண்ணத்தை மாற்றும் பொருட்டே நான் தங்களுக்கு இப்பொழுது இப்பொருள்களைக் காட்டி

னேன்; அதைப் பார்த்துத் தாங்கள் என்னுடைய கருத்தைத் தெரிந்து கொள்ளாமல், 'இவற்றை எதற்காகக் காட்டுகின்றாய்?' என்று என்னிடம் கேட்டீர்கள்; அதனால் நான் தங்கள் வாயினாலே யே உங்கள் கருத்தை வெளியிடச்செய்து, அதன் மேல் உங்களுக்கு அதற்குத் தக்க வார்த்தை கூறலாமென்று இக் கேள்வியைக் கேட் டேன்; இக் கேள்விக்கு நீங்கள் பதில் சொன்னதில் என் மீது கெட்ட இச்சை வைத்திருக்கிறீர்களென்பது நிச்சயமாக விளங்கி விட்டது; இனி நான் இங்கு வைத்த பொருள்களைப் பற்றியும், தாங்கள் கொண்ட இச்சையைப் பற்றியும் சொல்ல வேண்டியவை களைச் சொல்கிறேன் கேளுங்கள். நானோ, ஒன்று மறியாத பேதை; தாங்களோ பல நூல்களையும் கற்றுணர்ந்த புத்திமானு யிருப்பீர்கள்; இத்தகைய தாங்கள் இந்தக் கேவலமான வழியிற் பிரவேசிப்பது தகுதியாகாது; ஐயா! தாங்கள் இச்சை கொண்டு வந்திருக்கும் பொருள் யான்; என்னை ஈசன் எந்தெந்தப் பொருள் களைக் கொண்டு சிருஷ்டித்திருக்கிறான் என்பதைச் சற்று கவனித்துப் பாருங்கள்; என் தேகத்தில் எனது ஆவியைத் தவிர மற்றைய பொருள்கள் யாவும் இங்கு தாங்கள் கண்ட பொருள்களே; அவற்றினாலேயே என் உடம்பு அமைக்கப்பட்டிருக் கிறது; தங்கள் உடம்பும் அவற்றினாலேயேதான் அமைக்கப்பட் டது; இத்தகைய ஆபாசப் பொருள்களை உள்ளே வைத்து என் னுடம்பு மேலே பளபளப்பான தோலால் மூடப்பட்டிருக்கிறதை நீங்கள் உணராமல் மாமிசமாகிய என்னை இச்சித்து வந்திருக்கிறீர் கள்; ஆதலால், என்னுடம்பு இந்த ஆபாசப் பொருள்களே என் பதைத் தங்களுக்குக் காட்டும் பொருட்டே இவற்றை இங்கு வைத் தேன்; இவைகளைத் தாங்கள் நன்றாகக் கவனித்தால் என்னிடத்தில் இச்சை வைக்க மாட்டீர்கள்;ஐயா! தாங்கள் இதற்கு முன் நம்முடைய ஆவிக் கிருப்பிடமாகிய இந்த யாக்கையின் ஆபாசத்தைப் பற்றிப் பெரியாரின் நூல்களின் முகமாகவேனும் தெரிந்து கொண்டிருப்பீர் களென்று நான் நினைத்தேன்; அவ்விதம் தெரிந்து கொள்ளவில்லை யென்பது இப்போது விளங்குகின்றது; ஆதலால் இதைப்பற்றிப் பெரியார் கூறியிருப்பதையும் நான் தெரிவிக்கிறேன்; உணர்ந்து கொள்ளுங்கள்;

"ஊற்றைச் சரீரத்தை யாபாசக் கொட்டிலை யூன்பொதிந்த
பீற்றற் றுருத்தியைச் சோறிடுந் தோற்பையைப் பின்னும்பின்
[னும்
காற்றிற் பொதிந்த நிலையற்ற பாண்டத்தைக் காதல்செய்தே
யெற்றுத் திரிந்துவிட்டே னிறைவா கச்சியேகம்பனே"

என்று நமது சரீரத்தைப்பற்றிப் பட்டினத்தடிகள் பாடியிருக்கின்றார்கள். இதையும் சற்று யோசித்துப் பாருங்கள்; இப்படி மனித தேகம் ஆபாசமுடையதாயிருந்த போதிலும் உலகத்தில் ஆண் பெண் என்ற பேதமும், அவர்களுக்குள் ஒருவரை யொருவர் விரும்புவதும் எதற்காகக் கடவுளால் அமைக்கப்பட்டிருக்கின்றன வெனில் உலகத்தில் இல்லற தருமம் நிலைத்து உலக இயல் நடை பெறுவதற்காகவே. ஆண் பெண்கள் முறைப்படி மணஞ் செய்து கூடி இல் வாழ்க்கையை நடத்துவதால் சந்ததி விருத்தியடைந்து ஜன சமூகம் வளர்கின்றது; மேலும் ஓர் குடும்பத்தில் தம்பதிகளுக்குப் புத்திரன் பிறந்தால் புத் என்னும் நரகத்தை விட்டு அவர்கள் நீங்குகிறார்கள்; அதனாலேயே அவனுக்குப் புத்திரன் என்ற பெயர் ஏற்பட்டிருக்கிறது; புத் அரன்— என்னும் இரண்டு பதங்களும் சேர்ந்து புத்திரன் என்ற பெயர் உண்டாயிற்று; புத்—புத்தென்னும் நரகத்தை, அரன்- நாசஞ் செய்பவன் என்று இப் பெயருக்கு அர்த்தமாம்; இன்னும் ஒரு பரம்பரையில் பிறப்பவர்கள் செய்யும் சிரார்த்தம் முதலிய கர்மங்களால் அக்குலத்தைச் சார்ந்த பிதுர்க்கள் நற்கதியடைகிறார்கள்; இவற்றை யெல்லாம் உத்தேசித்தே ஆண் பெண் சேர்க்கை ஏற்பட்டிருக்கிறது; புத்திமான்கள் இந்த உட் கருத்தை யுணர்ந்து இவற்றின் பொருட்டு மணம் புரிந்து இல்லற தருமங்களை நடத்தி, உடல் நலத்தைப் பெரிதாகப் பாராட்டாமல், சந்ததிகளை மாத்திரம் விருத்தி செய்து நற்கதியடைகிறார்கள்; சிலர் உடம்பையே வெறுத்து மணஞ் செய்து கொள்ளாமல் வெளியேறித் தவஞ் செய்து முத்தியடைகிறார்கள்; அறிவில்லாதவர்களாகிய; சிலர் தாம் உடம்பைச் சிறந்த பொருளென்றும், இதனால் பெரிய இன்பமிருக்கிறதென்றும் நினைத்து அந்தப் பொய்யான இன்பத்தை அனுபவிப்பதற்காகப் பெண் சேர்க்கையை விரும்புகிறார்கள்; அப்படி

விரும்புவதிலும் ஒரு பெண்ணை மணப்பதுடன் திருப்தியடையாமல் கண்ட கண்ட பெண்களை யெல்லாம் விரும்புகிறார்கள்; அதனால் அக்கினிசாக்ஷியாக மணஞ் செய்த மனைவியரைத் தவிக்கவிட்டு விலைமாதரை விரும்புகிறார்கள்; விலைமாதர் பலர் சேர்க்கையுடையவர்களாதலின், அவர்களுடைய உடம்பு மற்ற பெண்களின் உடம்பைக் காட்டிலும் மிக்க ஆபாசமானது; இவர்களை விரும்புவோர் மிக்க அறிவீனராவார்கள். செடிகளுக்கும், பயிர்களுக்கும் மழை பிரதானம்; மழைக்கு மேகம் பிரதானம்; மேகத்திற்கு வானம் பிரதானம்; வானத்திற்கு சந்திர சூரிய தாரகைகள் பிரதானம்; தடாகத்திற்குத் தாமரை பிரதானம்; கோயிலுக்குக் கடவுள் பிரதானம்; சிம்மாசனத்திற்கு அரசன் பிரதானம்; நாட்டிற்குக் குடிகள் பிரதானம்; மனிதருக்கு உத்தமகுணம் பிரதானம்; அவ்வுத்தம குணமுடையாரில் புருஷனுக்கு மனைவியும்,மனைவிக்குப் புருஷனும் பிரதானம்; அவ்விருவருக்கும் ஓர் புத்திரன் பிரதானம்; அப்புத்திரோற்பத்தியின் பொருட்டே விவாகமென்பதும் தர்மம் என்பதும் ஏற்பட்டுள்ளன.

இத்தகைய அரிய பெரிய நோக்கங்களைக் கொண்டு பெரியோர் விவாக நிபந்தனைகளை எத்தனையோ மந்திரங்களின் மூலமாகவும், கடவுளின் ஆணையின் மூலமாகவும் மனிதர் நடத்திவரத் தக்க ஏற்பாடுகளைச் செய்திருக்கிறார்கள்; இப்படிச் செய்திருந்தும் சில அறிவீனர்கள் இக்கட்டுப் பாடுகளை விட்டு நீங்கித் தங்கள் மனம் போன போக்கெல்லாம் நடக்கத்தொடங்கு கிறார்கள்; அவர்களுக்குத் தக்கபடி தேவதாசிகள் என்ற வகுப்பாரும் பூர்வத்தில் தங்கள் குலத்திற்கு ஏற்பட்டிருந்த கௌரவத்தைக் கெடுத்து இழிந்த செயல்களைச் செய்யத் தொடங்கித் தங்கள் உடம்பைத் தினந் தோறும் பலர்க்கு விலைக்கு விற்கிறார்கள்; முற்காலத்தில் இவர்கள் தெய்வத்திற் கடிமைகளாய்ப் பணிபுரிந்து அக்காரணத்தாலேயே தேவரடியாள் என்ற பட்டம் பெற்றிருந்தார்கள்; இக்காலத்தில் அப் பெருமையை ஒழித்துவிட்டார்கள்; நான் அக்குலத்தைச் சேர்ந்தவளாயிருப்பதால் தாங்கள் என்னையும் மற்றவர்களைப்போல நினைத்து என்னிடம் கெட்ட இச்சையை நிறைவேற்றிக்கொள்ள

வந்திருக்கிறீர்கள்; இதனால் தங்களுக்கு ஒரு சுகமு மில்லை; கெடுதியே நேரும்; தங்கள் மனைவியும் வயிறெரியக் கூடும்.

ஐயா! தங்களுடைய மனைவியின் கண்ணீரானது வீண் போகாது; தங்களைத் தீக்கதியிற் கொண்டுபோய்ச் சேர்க்கும்; இதையும் நீங்கள் சற்றும் உணரவில்லை; தாங்கள் பத்தினியாரின் எழிலையும், இன்சொல்லையும், யௌவனத்தையும் வெறுத்துக் கேவலமான ஓர் அயல்மாதினிடம் இச்சைகொண்டுவந்துள்ளதானது எவ்வித மிருக்கின்றதெனில், மிகவும் இனிப்பான கோவின் க்ஷீரத்தை வீசிக் கவிழ்த்துவிட்டு, அறிவைக் கெடுத்து அவமானத்தை 'புண்டாக்கும் பனங்கள்ளை உயர்வென வெண்ணி அதைக் குடிக்கப் பிரியப்பட்டதைப்போலிருக்கின்றது.

ஐயா! உலகத்தில் ஒவ்வொரு மனிதரிடத்திலும் அறி வென்னும் ஓர் அரிய பொருளை ஈசன் அவர்களுக்குப் பிறப்பிலேயே அளித்திருக்கின்றான்; சிலரிடம் அவ்வறிவானது சாணை பிடிக்காத கமலம் போன்று மங்கிப் பிரகாசிக்கின்றது; பிரகாசங் குறைந்த கற்கள் சாணையிற் பிடிக்கப்பட்டால் அவற்றிற்கு எப்படிப் பள பளப்புண்டாகுமோ அப்படியே, மழுங்கிய அறிவானது கல்வி என்னும் சாணையால் பிரகாசமடையச் செய்யலாம்; அத்தகைய கல்வி என்னும் சாணையைக் கொண்டு அறிவை விருத்தி செய்வ தற்கு முயற்சி என்னும் கையாள் முக்கியமாகத் தேவை; முயற்சி என்னும் கையாளை அவ் வழியில் திருப்பினால் அதன் மூலம் கல்வி பெற்றுச் சகல நன்மைகளையும் அடையலாம்; அதே முயற்சியைத் தீய வழியில் செலுத்தித் தங்களைப் போன்று வெகு பிரயாசை பட்டுத் திரட்டிய பணத்தைச் செலவாக்கி இவ்வாறு துஷ்கிருத்தி யங்களைச் செய்வோருக்கு அம் முயற்சியே உயிர்ச் சேதத்தையு முண்டாக்கி அவர்களைக் கெடுத்துவிடும்; அப்படி யிருக்கத் தங்களுக்கு ஈசனால் அளிக்கப்பட்ட அறிவைக் கல்வி முயற்சியால் விருத்தி செய்து நல்வழியிற் செலுத்தாமல் அரிவையர் மீது செலுத்தத் தொடங்கி யிருக்கின்றீர்கள்; இதன் பயனைப் பின்னால் அறிவீர்கள்.

ஐயா! தங்களுடைய நட்பிற்கு யான் எவ்விதம் உரிமையான வளா யிருக்கின்றேனோ அவ்விதமே அம் மாமிசத் துண்டுகளும் உரித்தானவைகளாகும், ஆகையால் தங்களுடைய அருமையான எண்ணத்தை அதன் பால் செலுத்துங்கள்; இல்லையேல் இதே பொருள்களைக் கொண்டு தமக் கென்றே ஈசனால் படைக்கப்பட்டுள்ள தங்கள் மனையாளிடத்தில் சென்று தங்கள் இஷ்டத்தைப் பூர்த்தி செய்துகொள்ளுங்கள்; கேவலமாகத் தாங்கள் இவ்விதம் கெட்டு அலைவதை நான் என்னால் கூடியமட்டில் தடுத்துத் தங்களை நல் வழிக்குத் திருப்பவேண்டுமென்ற எண்ணம் எனக்குண்டானதால் நான் இவ்வாறு சில விஷயங்களைத் தங்களுக்கு உரைத்தேன்; நீங்கள் இவற்றை நன்கு கவனித்து நல்வழிக்குத் திரும்புங்கள்; தாங்கள் எனக்காக அளித்த பணத்தை கஞ்சிக்குப் பஞ்சாய்ப் பறக்கும் ஏழைகளின் பசிக் கொடுமையைத் தீர்க்கும் பொருட்டும், அவர்கள் தம்மை வாழ்த்தும் பொருட்டும் நான் செலவு செய்கிறேன்; அதனால் தங்களுக்குப் புண்ணிய முண்டு; இனியேனும் தாங்கள் நல் வழியில் திரும்புவதுடன் இவ்விதமான புத்தி யுடைய மனிதர் களையும் சீர்திருத்தஞ் செய்து எங்கள் குலத்திற்கு ஏற்பட்டுள்ள இழுக்கையும் வேருடன் களைந்துவிடும்படியான முயற்சியைச் செய்யவேண்டும்; இவ்வாறு செய்வீராயின் உம்மை உலக முழுதும் கொண்டாடும்; எங்களைப் போன்ற பரத்தையரும் நல்வழிப் பட்டுய்வார்கள்; கடவுளுக்கும் தம்மீது அபாரமான கிருபை பிறக்கும்; தாங்கள் வந்த வழியே சென்று வாருங்கள்; தாங்கள் இவ்விடம் வந்த செய்தியைத் தமது மனைவி யறிந்தால் எவ்விதமான மனக் கொதிப்பையடைவார்கள் என்பதைச் சற்று யோசித்துப் பாருங்கள்; தங்கள் பத்தினி ஓர் சோர நாயகனுடன் செல்வதைத் தாமறிந் தால் தமது உள்ளம் எவ்வித நிலைமையி லிருக்கும் என்பதை யோசித்தால் தாங்கள் இவ்விதமான காரியத்தில் கருத்தைச் செலுத்தவே மாட்டீர்கள்; எங்களுக்கும், எங்கள் குலத்திற்கும் ஓர் இழுக்கையுண்டாக்காமல் இந்தமட்டுடன் சென்று வாருங்கள்; தாங்கள் எனக்குத் தற்போது அளித்த பணத்தைக் கடவுள் புண்ணியமாக மாற்றி அதை நற்பயனாகிய வட்டியுடன் மறுமையில் உமக்கு அளிப்பார்; நீங்கள் வருந்த வேண்டாம்; இனிமேல்

இவ்வித ஆபாசத்தில் புத்தியை செலுத்தாது, தமது அறிவை நல்வழியில் செலுத்தி நற் பயனை யடையுங்கள்; இனித் தங்களுக்கு என்னால் கூறவேண்டியது எனக்கு வேறொன்று மில்லை; தங்களுக்கு அனேக வந்தனம்; சென்று வாருங்கள்; கண்விழித்துக் கருத்தழிந்து கெட வேண்டாம்; இல்லத்திற்குச் சென்று இல்லாளின் இன் மொழி கேட்டு இன்ப மனுபவித்துக்கொள்ளுங்கள்'' என்று சற்றும் இளக்காமலும் வெகு காம்பீரமாயும், ஓர் விதமான ஆவேசத்தினால் தூண்டப்பட்டவளாகிப் பட படப்புடன் கூறினாள்.

இவள் பேச ஆரம்பித்தது முதல் ஒவ்வொரு விஷயத்தையும் அம் மனிதர் கவனித்துக்கொண்டே வந்தார். அவற்றைக் கேட்கக் கேட்க அவருக்கு மனத்தில் ஒருவிதமான லஜ்ஜை யுண்டாகிச் சிறுகச் சிறுக வளர்ந்துகொண்டே வந்தது. அவர் மனத்தில் நல்ல விதமான நூதன உணர்ச்சி கிளம்பி எழுந்து அவருடைய செய்கை மிக இழிவானதென்பதைத் தாமே அறிந்துகொள்ளச் செய்தது. அவர் மனத்தில் அபாரமான வருத்த மேற்பட்டுவிட்டது; அவள் பேச்சினால் அவர் மனம் இளகிவிட்டது; மனத்தி லிருந்த தூர்க்குணங்களெல்லாம் அகன்றுவிட்டன; அவர் அப்படியே அசைவற்று மெய்ம் மறந்து ஸ்தம்பித்தபடியே உட்கார்ந்திருந்தார்.

அவள் கூறியதற்குத் தாம் பதில் சொல்லவேண்டு மென்று எண்ணினார்; எனினும், 'இவளுடைய பெருந் தன்மையான கருத்துக்களடங்கிய நீதி வாக்கியத்திற்கு யாது மறியாத மூடாத்மாவாகிய நாம் என்ன பதிலளிப்பது?' என்று யாதொன்றும் சொல்ல முடியாமல் விழித்தபடியே மனதுருகிக் கண்ணீர் பெருக்கினார். தாம் பதில் கூறுவதற்கே இடமின்றி எல்லாவற்றையும் அப் பெண்ணே கூறியதையும், கேவலம் தம் உடலையே விலைக்கு விற்போரின் குலத்தி லுதித்த மங்கைக்கு இத்தகைய புத்தி ஏற்பட்டிருப்பதையும், தமக்கு அவ்வித புத்தி யில்லாமற் போனதையும், தாம் அவள் கூறியவற்றிற்குப் பதி லளிக்க முடியாமல் விழிப்பதையும் நினைக்க நினைக்க அவருக்கு வியப்பும், வெட்கமும் அதிகரித்துக்கொண்டிருந்தன. தாம் கல்வியைக் கசடறக் கற்காமல்

இவ்விதம் ஞான சூனியராகவும், காமுகராகவும் ஆய்விட்டதைப் பற்றி அவர் பெருங் கவலைப் பட்டுக்கொண்டிருந்தார். பின்னர் அவர், வரும்போது கொண்டிருந்த துர் எண்ணங்களெல்லாம் நீங்கப்பெற்று அறிவுடையவராய் விளங்கினார் அங்ஙனம் விளங்கி அப்போது ஓர் புதிய மனிதராக மாறிவிட்டார். அவர் மனத்தில் நூதனமான நல்ல எண்ணங்களுதித்தன; அம்புஜா வினிடத்தில் அவருக்கு அத்தியந்த மதிப்பும் ஏற்பட்டது. அவர், அவளை யோர் பெண்மணியாக எண்ணாமல் தமக்குபதேசம் செய்ய வந்த குருவாகவே பாவித்துவிட்டார். அவருடைய கரங்கள் அவரை யறியாமலேயே குவிந்து சிரமேல் ஏறிவிட்டன; அவர் கண்களில் ஆநந்தக் கண்ணீர் அருவிபோலச் சொரிந்தது.

இந்நிலைமையை அடைந்ததும் அம்மனிதர் தமது செவி களில் அலங்கிருதமாக அணியப்பட்டிருந்த வைரக்கற்கள் பதித்த கடுக்கனையும், கை விரல்களில் அணியப்பட்டிருந்த மோதிரங் களையும் கழற்றி அம்புஜத்தின் இருபாதங்களிலும் சமர்ப்பித்து அவளை நோக்கி, "அம்மணீ! என்னைப் புனர்ஜன்மமெடுக்கச் செய்து புதுப்பித்த என் தாயே! தங்களை யான் அபூர்வ ஆத்ம ஞானி என் பதை யுணர்ந்து கொள்ளாமல் என்னுடைய அறியாமையினால் ஒரு மாதரசியாக எண்ணி இங்கு வந்தது எனக்கு நன்மையாகவே முடிந்து விட்டது.

அம்மணீ! தற்போது தாங்கள் எனக்கு ஞானோபதேசஞ் செய்து நன்மார்க்கத்தைக் காட்டியதற்கு இவைகளைப் பாத காணி க்கையாக ஏற்றுக்கொள்ளவேண்டும்; என் தாயே! நான் சென்று வருகிறேன்; தம்முடைய அமுதமொழிகளால் நான் கிருதார்த் தனானேன்" என்று கூறிய படியே அம்மாதரசியின் காலில் விழு ந்து பணிந்தெழுந்தார். அதற்குமேல் அவருக்கு அவ்விடத்தி லிருப்பதற்கு மிகுந்த லஜ்ஜையாயும், வருத்தமாயும் இருந்ததால் அவளிடம் விடைபெற்றுக் கொண்டு அவ் வீட்டை விட்டுப் போய் விட்டார்.

இங்கு நடந்த சகல விஷயங்களையும் மறைவிலிருந்து பார்த்து உள்ளம் பூரித்து வியந்துகொண்டேயிருந்த நமது மின்னிடை மாத

ரசியாகிய மரகதவல்லி அவர் வெளியே சென்ற பின்னர் தான் அம்மறைவிடத்தை விட்டு வெளியேறி அம்புஜத்தைச் சேர்த் தணைத்துத் தழுவிக்கொண்டு, "ஆகா! என் இன்ப சகியே! உன்னுடைய பக்தி வைராக்கியத்தையும், அபாரமான புத்தியின் வல்லமையையும் பற்றி நான் அடங்கா மகிழ்ச்சியடை கின்றேன்; இக்காலத்தில், அதிலும் உன் குலத்தில் உதித்த நங்கையர்களில் இத்தகைய அரிய நோக்கமும், மேம்பாடும், அறிவும் பெருகியுள்ள மாதரைக் காண்பதரிதாகும்; அடாடா! என்ன புத்தி! அம்புஜம்! உன்னுடைய பரிசுத்த மனோபரிபக்கு வத்தைக் கண்ட என்னுடைய உள்ளமானது மிகவும் திருப்தி யடைகின்றது; இந்த ஆநந்தத்தினால் என்னுடைய வயிற்றுவலியும் நிவர்த்தியாகிவிட்டது; ஆகா! உன்னுடைய அரிய உபதேசத்திற் கனுகூலமாயிருக்கும்படி இவ்வித ஆபாசப் பொருள்களான மாமிசங் களை நீ எவ்விதம் சேர்த்தனையம்மா!" என்று கரை புரண்டோடும் வியப்பும், அன்பும் உடையவளாய்க் கேட்டாள்.

இதைக் கேட்ட அம்மங்கை நல்லாள் வெறுப்பும், சலிப்பும் கொண்ட மனத்தினளாய்ப் பேசத் தொடங்கி, "அம்மணி! இவற் றைக் கசாப்புக் கடைக்காரன் மூலம் தயாரித்தேன்; என்னுடைய பிழைப்பை எவரும் வியந்து போற்றமாட்டார்கள்; ஆ! தங்களு டைய உன்னத குணத்தின் மகிமையால் இவ்விதம் என்னைப் புகழ் ந்து கூறுகின்றீர்கள்; கேவலம் பலரும் வெறுத்து விலக்கக் கூடிய என்னுடைய பிறவியின் காலம் முடிவடைந்து எல்லோராலும் நன்கு மதிக்கப்படும் உயரிய குலத்து மாதாக நான் மீண்டும் உதித்தாலன்றி என் மனம் சமாதானமாகாது; இப்பிறவியில் எனக்கு எத்தகைய போக சுகங்களும், செல்வச் சிறப்புமிருப்பினும் திருவிளையாடல் புராணத்தில்,

"இழிபவ ருயர்ந்தோர் மூத்தோரிளையவர் கழியா நோயாற்
கழிபவர் யாவரேனுங் கண்வலைப்பட்டு நெஞ்ச
மழிபவர் பொருள் கொண்டேள்ளுக்கெண்ணெய் போலளந்து காட்டிப்
பழிபடு போகம் விற்பாராவணப் பண்பு சொல்வாம்

என்று கூறுகிறபடி அமைந்த எனது இழிவான பெயர் நீங்குமா! போகத்தை விலைக்கு விற்கும் பரத்தை என்ற நாமம் மறைந்து போகுமா! நான் எவ்வளவு பரிசுத்தமாக விருப்பினும், என் குலத்தின் சீர் கேடான பெயர் ஒருபோதும் மறையப் போவதில்லை; ஆதி காலத்தில் மிகுந்த உன்னத நிலையிலிருந்த என் குலவியற்கையானது தற்போது இத்தகைய ஆபாசமான நிலைமைக்கு வந்து விட்டது; நாலடியாரில்,

"விளக்கொளியும் வேசையர் நட்பு மிரண்டுந்
துளக்கற நாடின் வேறல்ல—விளக்கொளியு
நெய்யற்ற கண்ணேயறுமே யவரன்புங்
கையற்ற கண்ணே யறும்.

என்று கூறியபடி, இக்காலத்தில் இக் குலத்தார் தம்மிடம் அகப்படும் ஆடவர்களிடம் கைப்பொருள் அற்றுவிடின், அவர்கள் முன் செய்த நன்றியை மறந்து அவர்களைத் துரத்தி விடுவதையே தமது முக்கிய கடமையாகக் கொண்டிருக்கிறார்கள்; இப்படி இவர்கள் செய்யும் அனியாயத்தைச் சகிக்கக் கூடவில்லை; அதை நினைத்தாலே என் மனம் எரிந்து வெதும்புகின்றது; உம்; அது கிடக்கட்டும்; அந்த ஆபாசக் கதையை எடுத்துக் கூறிக் கொண்டே போனால் அதற்கோர் முடிவு ஏற்படாது; அந்த விஷயமே ஓர் தனிப்புத்தகமாய்விடும்; அந்தச் சனியன் பிடித்த விஷயத்தைத் தள்ளி விட்டு இனி வேறு விஷயத்தைப் பற்றிப் பேசுவோம்; அம்மா! உங்களுடைய வரலாற்றைக் கூறுங்கள்; தங்களது இருப்பிடம் யாது?" என்று கேட்டாள்.

மரகதம்:—"அம்மா! அம்புஜா! ஓர் மரத்திற் பழுத்த பழங்களிலேயே ஒன்று மதுர முள்ளதாயும், மற்றொன்று கசப்புள்ளதாயுமிருப்பது போல ஒரே தாயாரின் வயிற்றில் ஜனித்த நீயும், உன் தங்கையுமாகிய இரு பெண்களில் உன்னுடைய போக்கு நல்ல விதமாயும், உன் தங்கையின் மாதிரி கெட்டவிதமாயு மிருக்கின்றன; இவை எனக்கு மிகுந்த வியப்பைத்தருகின்றன; உம்; உன்னுடைய கதை மிக்க விநோதமாயிருக்கிறது; அதைக் காட்டினும் என் கதை

அதிக அதிசயம் பொருந்தியது; அதை நீ கேட்கவிரும்புகிருய்; ஆதலால், அதைச் சொல்லுகிறேன் கேள். என் பெயர் வேதவல்லி'' என்று கூறித் தன்னுடைய சரித்திரத்தை அங்குக் கிழவியிடம் தெரிவித்தபடியே உரைத்து வருந்திஞள்.

இந்த அதிசயமான வரலாற்றைக் கேட்ட அம்புஜம் பெரிதும் வருந்திக் கண்கலங்கிஞள். அப்போது இரவு மணி 2 அடித்தது. உடனே அம்மங்கை மரகதத்தை நோக்கி, "அம்மணீ! நிரம்பவும் அகாலமாகிவிட்டது; நாம் பேச்சுப்பராக்கில் நேரத்தையும் கவனிக்கவில்லை; தாங்கள் சயனித்துக் கொள்ளுங்கள்; அதிக நேரம் விழிப்பதால் தமது தேக சுகத்திற்குக் கேடு நேரும்; எழுந்திருங்கள்'' என்று கூறி, அவளை யழைத்துச் சென்று ஓர் உயர்தர படுக்கையில் படுக்கச் செய்து தானும் அவ்வறையிலேயே ஓர் மஞ்சத்தில் படுத்தாள். இருவரும் படுத்த பின்னரும் உடனே நிம்மதியாக நித்திரை கொள்ளாது ஏதேதோ விஷயங்களைப் பற்றிச் சிறிது நேரம் பேசிக் கொண்டேயிருந்து பின்னர் துயின்றனர்.

அவர்கள் துயின்ற சிறிது நேரத்திற்குள் பொழுதும் புலர்ந்தது. அங்ஙனம் விடிந்தவுடனே இரு பெண்மணிகளும் நித்திரை விட்டெழுந்து நித்திய கடன்களை முடித்துக்கொண்டார்கள். பின்னர் அம்புஜா, பாலும் கனிவகைகளும் மரகதவல்லிக்கு அன்புடனளித்துப் புசிக்கச் செய்தாள். அவ்வாறு அம்புஜமளித்த அரிய பாலையும், பழத்தையும் அருந்திய மரகதம், அவளை நோக்கி, "அம்மா, அம்புஜா! இனிமேலும் நான் செல்லாவிட்டால் நானிருக்கும் வீட்டிலுள்ள பெரியம்மாள் வருத்தமுற்று என்னைத் தேடுவார்கள்; ஆகையிஞல் யான் செல்லவேண்டும்; நீ எனக்கு விடை கொடுத்து என்னை யனுப்பிவிடு; மேலும் யான் இங்கு வந்ததையும், இவ்வூரில் இருப்பதையும் நீ யாரிடமும் தெரிவிக்காதிருக்கும்படி உன்னை யான் மிகவும் கேட்டுக்கொள்கிறேன்'' என்று தாழ்ந்த குரலால் கூறிஞள்.

இவற்றைக் கேட்ட அம்புஜா மரகதத்திற்கு மிகுந்த நம்பிக்கையுண்டாகத் தக்க விதமாகப் பேசத் தொடங்கி அவளை நோக்கி, "அம்மணீ! நான் தங்கள் விருப்பப்படி இச்செய்திகளை எவரிடமும்

தெரிவிக்கமாட்டேன்; இதை உறுதியாக நம்புங்கள்; இதிற் சிறிதும் ஐயம் வேண்டாம்; அம்மணி! தங்களுடன் சில மணி நேரமே பழகினேன் எனினும் தங்களைப் பிரிய என் மனம் சம்மதிக்கவில்லை; தாங்கள் ஒரு வேளை உணவுண்பதற்கும் யோக்கியமற்ற குலத்தில் நான் பிறந்திருப்பதால் தங்களை இவ்விடமே வைத்துக்கொள்ளவும் தகுதியற்றிருக்கின்றேன்; தாயே! அடிக்கடி நான் தங்களைப் பார்க்காவிட்டால் என்மனம் மிகுந்த வருத்தத்தை யடையும் போலவிருக்கின்றது; நான் விரும்பிய போது நீங்களிருக்குமிடத்திற்கு வண்டி யனுப்புகிறேன்; தாங்கள் அடிக்கடி இவ்விடத்திற்கு வந்து போய்க் கொண்டிருக்கவேண்டும்; அடியாளும் அடிக்கடி அவ்விடம் வந்து தங்களைப் பார்த்துக் கொள்வேன்; தாங்கள் இவ்வேழையை மறந்து விடலாகாது'' என்று கூறிக் கண்ணீர் உதிர்த்தபடியே மரகதத்தைத் தழுவிக் கொண்டாள்.

மரகதத்திற்கும் அம்புஜாவின் மீது அளவு கடந்த பிரிய மேற்பட்டு விட்டபடியினால், அவளும் அம்புஜத்தை அன்புடன் தழுவிக் கொண்டு க்ண்ணீர் உதிர்த்தபடியே, ''அம்மா! அம்புஜா! உன்னுடைய கனிந்த அன்பும், பரிசுத்தமான மனமும், தெளிந்த அறிவும், உத்தம குணமும் ஒன்று கூடி நான் உன்னை விட்டுப் பிரிய என் மனமிசையாதிருக்கும்படி செய்கின்றன; எனினும் பிரியாமலிருக்க முடியவில்லை; என்ன செய்யலாம்; அம்மா! உனது இஷ்டப்படியே நீ எந்த நேரத்திலும் வந்து என்னைப்பார்ப்பதில் தடையில்லை; யானும் இங்கே வந்து போய்க் கொண்டிருக்கிறேன்; நான் சென்று வருகிறேன்; உன்னுடைய கருணை நிறைந்த குணத்திற்கு ஈசன் திருப்தி கொள்வார்; ஒரு போதும் உனக்குக் குறைவு செய்ய மாட்டார்; நான் விடை பெற்றுக் கொள்கிறேன்'' என்று கூறியபடியே எழுந்தாள்.

இதற்குள் அம்புஜா, தனது வண்டியைத் தயார் செய்யும்படி கோச்மேனுக்கு உத்தர விட்டாள்; வண்டியும் தயாராகிவிட்டது. உடனே அம்புஜா முதல் நாள் மரகதம் வீழ்ந்தபோது அவளுடைய இடுப்பிலும், கையிலு மிருந்த குடங்களைத் தான் எடுத்துச் சென்றிருந்தபடியால் அவற்றை எடுத்துவந்து வண்டியில் வைத்து

விட்டுப் பின்னர் வெற்றிலே, பாக்கு, பழங்கள் முதலியவற்றை ஓர் தட்டில் வைத்து அதையும் வண்டியில் கொண்டுபோய் வைத்து விட்டு, அதன்மேல் மரகதத்தை அவ் வண்டியில் ஏற்றிக்கொண்டு தானும் கூட அமர்ந்து வண்டியை நடத்துவித்துச் சென்று மரகதம் காட்டிய கிழவியின் வீட்டில் அவளை விடுத்தாள். அப்போது அங்குள்ள கிழவியும், அவள் மகளும் மரகதத்தைக் காணுது வருத்தப்பட்டுக்கொண்டிருந்தார்கள். அம்புஜா அதைக் கண்டு, அவர்களிடம் நடந்த வரலாற்றைக் கூறி மரகதத்தினிடம் உத்தரவு பெற்றுக்கொண்டு திரும்பித் தன் வீட்டை யடைந்தாள். அதுமுதல் மரகதமும், அம்புஜாவும் முன் பேசிக்கொண்டபடியே ஒருவர் வீட்டிற்கு ஒருவர் போய் வந்துகொண்டு வெகு சிநேகித மாயும், அன்பாயும் இருந்து வந்தார்கள். இவ்விதமாகச் சில மாதங்கள் கடந்தன.

மரகதத்தின் பிரசவ காலமாகிய 10-வது மாதம் பிறந்து விட்டது. மரகதத்திற்கு ஆயாசமும், அக்காலத்தில் ஏற்பட வேண்டிய சின்னங்களாகிய ஓய்ச்சல் முதலிய யாவும் அதிகமாக ஏற்பட்டுவிட்டன. அவற்றை யெல்லாம் கண்ட மரகதத்திற்கு வருத்த மேற்படாமல் மிகுந்த சந்தோஷமே உண்டாயிற்று. ஏதனுலெனில், பிரசவத்திற்குப் பின், தான் உயிரைப் போக்கிக் கொள்ளவேண்டுமென்று தீர்மானித்திருந்ததற்கு அனுகூலமான காலம் சமீபித்து விட்டதனுலேயே. அவ்வாறு அவள் மிகுந்த மகிழ்ச்சியை அடைந்து, அந்நாளை எதிர்பார்த்திருந்தாள். பின்னர், சில தினங்கள் சென்றதும் நமது மரகதத்திற்கு ஓர் தினம் நண்பகலில் பிரசவ வேதனையுண்டாயிற்று முன் கூறியபடி அவள் சந்தோஷத்தை யடைந்திருந்தாலும் எக்காலத்திலும் இவ்வித வேதனையை அனுபவித்தறியாதவளாதலால் அந்த மின்னுளுக்கு இவ்வித புதிய வாதனையானது ஆரம்பத்திலிருந்தே தாங்க வியலாத பரம சங்கடத்தை யுண்டாக்கிவிட்டது. எனினும் அவள் அவ்வித வேதனையையும் சகித்துக்கொண்டு அதைப் பிறரிடம் கூறுதிருந்துவிட்டாள். ஆனுல் பொழுது செல்லச் செல்ல அவளுடைய இம்சை நிரம்பவும் அதிகரித்துவிட்டது. அப்போது

அவளுக்கு என்று மில்லாத துக்கமும், தனது பழைய காலவர்த்த மானங்களும் ஒன்றன்பின் ஒன்ருக நினைவிற்கு வந்துவிட்டன. அங்கிலேயிலும் அவள் தனது தொழிலாகிய சர்க்கா சுற்றுவதை விடாது சுற்றியவாறு மனமுருகித் தனக்குள்ளேயே அபாரமான மனத் துயரடைந்து புலம்பத் தொடங்கி, "ஆ! என்னுள்ளத்தில் குடிகொண்டிருக்கும் புவன ரக்ஷகா! பூதனையை வதைத்த புண்ணிய சீலா! தேவகிபாலா! தேவ தேவா! உலகத்தில் பிரசவமானது பெண்களுக்கு இறந்து பிழைத்தற்குச் சமானமாகுமென்றும், அதனலே, 'பெற்றுப் பிழைத்தாயோ செத்துப் பிழைத்தாயோ' என்ற பழமொழி ஏற்பட்டிருக்கிறதென்றும், இந்தக் கேள்வியை இனி உன்னிடத்திலும் ஒரு தினத்தில் கேட்பேனென்றும், என்னுருயிர்க் காதலர், நான் கருக்கொண்டபின் ஒருசமயம் என்னைப் பார்த்துக் கூறினர்; அவர் சொன்ன பழமொழியின் உண்மைக் கருத்து இப்போது நன்ருக விளங்கிவிட்டது; நான் இந்த வேதனை யைப் போன்ற வேதனையை எப்போதும் அடைந்ததில்லையே; என்னப்பனே! சக்கரக் கையனே! உன்னுடைய ஹஸ்தத்தின் எழிலைச் சிறப்பித்துக் காட்டக் கூடிய ஆயுதமாகிய சக்கரத்தினல் எத்தனையோ பக்த கோடிகளின் துயரை அகற்றி யிருக்கின்ருயே; மன்னவர் சபைதனில் மான மிழக்கும் தருணத்தில் இருந்த துரௌபதையின் மானத்தைக் காக்கும் பொருட்டுத் துகிலை வளரச் செய்தாய்; அதே சக்கரத்தினல் கஜேந்திரனைக் காக்க முதலையைக் கொன்ருய்; அதே ஆழியால் ஆதித்தனை மறைத்து ஐவருக்கும் ஜெயத்தை யுண்டாக்கி அருள் புரிந்தாய்; இன்னும் இவைபோன்ற எத்துணையோ இடர்களை பக்தர்களுக்கு உன்னழியினல் நீக்கி அவர்களைக் காத்தருள் செய்திருக்கின்ருய்; என்னப்பனே; ஜகதீசா! உன்னுடைய சக்கரத்தைப் போன்ற சக்கரவடி வமாயுள்ள இச் சர்க்காவையும் உன் கையின் ஆழி என்ப தாகவே நான் என் மனத்தில் பாவித்து இதனை இடை விடாது சுற்றுவது உன்னுடைய ஆராதனை யாகுமென்றெண்ணிச் சுற்றி வருகின்றேன்; இத்தகைய எனது ஆராதனையை நீ ஏற்றருளி என்னுடைய துயரத்தை இம்மட்டுடன் தொலையும்படி நீக்கி எனக்கு உன் பதமளிக்கமாட்டாயா! என் துன்ப மகற்றி என்னை

உன் திருவடி நிழலில் சேர்த்துக்கொள்ளமாட்டாயா! என் தற்போதைய சங்கடத்தை நிவர்த்தி செய்து என்னுடைய பிறவிப் பிணியை அகற்றி இவ்வுலகத்தினின்றும் என்னை நீ பிரித்துவிட வேண்டும்; இந்த ஒரு வரத்தை மட்டுமே நான் உன்னிடம் வேண்டுகிறேன்; என்னப்பனே! பார்த்தசாரதி!'' என்று மிகுந்த வருத்தத்துடன் கண்ணீர் விட்டழுதாள்.

இதற்குள் பொழுதும் சாய்ந்துவிட்டது. அவளுடைய வேதனை அதிகரித்துக்கொண்டே யிருந்ததால் அதற்குமேல் அவள் இராட்டினத்தைச் சுற்ற முடியாமல் மயங்கிப் படுத்துவிட்டாள். அப்போது அவளுடைய நிலைமையைக் கிழவியும், அவள் மகளும் அறிந்துகொண்டார்கள். அவ்விதம் அறிந்துகொண்டவுடனே மரகதத்தினிடத்தில் அளவுகடந்த பிரியம் வைத்து அவளருகில் சென்று அவளுக்கு ஆகாரத்தை மெல்ல பலாத்காரமாக அளித்துப் பின் அவளை நோக்கி, "அம்மா! ஓர் வண்டி கொண்டுவரச் செய்து உன்னை இங்குள்ள ஆஸ்பத்திரிக்குக் கொண்டுபோக யோசிக்கிறோம்'' என்றார்கள்.

இதைக் கேட்டதும் மரகதம் திடுக்கிட்டவளாய், "நாம் அவ்விடம் சென்றால் அந்தப் பகிரங்கமான விடத்தில் நம்மை யாரேனும் தெரிந்துகொள்வார்கள்; அதனால் நமக்கு மிகுந்த ஆபத்து விளைந்துவிடும்'' என்று எண்ணி அங்குச் செல்லப் பிரியப்படாமல் கிழவியை நோக்கி, "பாட்டி! நான் எந்தவிடத்திற்கும் செல்வதற்கு யோக்கிய முள்ளவளா யிருக்கும்படி என்னைக் கடவுள் வைக்கவில்லை; எந்த விடத்திலிருப்பினும் ஈசன் கிருபை யிருக்கும் பக்ஷத்தில், 'ஜயமுள்ளவரையில் பயமில்லை' என்றபடி எனக்கு ஓர்விதமான ஆபத்தும் நேராது; அவர் என்மீது கருணை செலுத்துவார்; நான் இவ்விடத்திலேயே இருக்கின்றேன்'' என்றாள்.

இதைக் கேட்ட கிழவி, "கருப்பிணி இசையாத காரியத்தை நாம் செய்வது சரியல்ல; பின்னர் ஏதேனும் ஆபத்து நேர்ந்தால் அதன்மேல் இவளை ஆஸ்பத்திரிக்குக் கொண்டுபோக யோசிக்க

லாம்" என்று வாளாவிருந்துவிட்டாள். அப்போது அம்புஜா அகஸ்மாத்தாக மரகதத்தைக் காணவந்தாள். அப்படி வந்தவள், அவளுடைய நிலைமையைத் தெரிந்து அவளைத் தன் வீட்டிற்கு அழைத்துச் சென்றுவிட்டாள். அவளுடைய அத்தையாகிய பெரிய அம்மாள் குடும்பத்தில் பலவிஷயங்களிலும் அனுபவமுள்ளவளாகவும், தைராசியுள்ளவளாகவும் இருந்ததால் சற்று தைரியத்துடன் மரகதத்தைத் தன் வீட்டில் வைத்துக்கொண்டாள். மரகதம் அங்கு இங்கிலேயில் இருப்பதை யாரும் அறியக்கூடாதென்று அவள் சொன்னபடியே அவளுடைய விஷயம் பிறருக்குத் தெரியா வண்ணம் அம்புஜம் அதனை மறைத்து வைத்து வெகு ஜாக்கிரதையுடன் அவளைக் கவனித்துவந்தாள்.

பிறகு அன்றிரவும் வந்து கழிந்து விடியற்காலமானபோது 5 மணிக்கு மரகதவல்லி கடவுளின் கருணையால் ஓர் ஆண் குழந்தையை ஈன்றாள். அம்புஜமும், அவளுடைய அத்தையும், மரகதத்தை ஆதரித்துவந்த கிழவியும், அவள் மகளும் மிகுந்த சந்தோஷத்தை யடைந்து மரகதத்தை, கண்ணைக் காக்கும் இமைகளைப் போல வெகு பக்ஷத்துடன் காத்து ஆதரித்துவந்தார்கள். பொழுது புலர்ந்த பின்னரே மரகதம் தன்னுடைய சுய உணர்வைப் பெற்றுத் தனது நிலைமை முற்றும் உணர்ந்துகொண்டாள்; தனது பக்கலில் அம்புஜம் வெகு பிரியத்துடன்; தனது குழந்தையை வைத்துக்கொண்டு உட்கார்ந்திருப்பதை நோக்கினாள். தனக்குப் பிறந்துள்ள குழந்தை ஆணோ பெண்ணோ என்பதை யவள் அதுவரை அறிந்துகொள்ளவில்லை. அதைத் தெரிந்துகொள்ள அவளுக்கு ஆவல் மிகுதியாக எழுந்தது. அவ்விதம் எழுந்த அவாவினால் மரகதம் தன்னருகில் உட்கார்ந்திருந்த அம்புஜாவையும் குழந்தையையும் உற்றுநோக்கினாள்.

தனக்காக அம்புஜா அத்தியந்த அன்புடன் பாடுபடுவதை எண்ணி அளவற்ற வியப்பும், ஆநந்தமும் கொண்டவளாய், ஆநந்தக் கண்ணீர் பெருக்கியவாறு அவளை நோக்கி, "என்னைச் சுகந்த நேசி! அம்புஜா! நான் உன்னுடைய சிரமத்திற்குக் காரணமானதை யெண்ணி மிகவும் வருந்துகிறேன். அடாடா என்ன

காருண்யம்! என்ன தயாளத் தன்மை! பரோபகார சிந்தை முற்றும் உன்னிடத்தே குடிகொண்டுள்ளது எனலாம்; என் பொருட்டாக நீ படும் சிரமத்திற்கு யான் என்ன விதமான கைம்மாறு செய்வேன்?'' என்று கூறியபடியே அவளுடைய கையை எடுத்துத் தனது கண்களில் ஒற்றிக் கொண்டாள்.

இதைக் கேட்ட அம்புஜா மிகுந்த களிப்பையும், உற்சாகத்தையுமடைந்தவளாய் மரகதத்தை நோக்கிப் பேசத்தொடங்கி, "ஆகா! என்னுயிர்த் தோழி! எனக்கென்ன சிரமம்! ஐயோ! என்னுடைய கேடு கெட்ட பிறவியில் நான் உனக்கு இத்தகைய தருணத்தில் உதவ நேர்ந்ததைப் பற்றி அளவிலா மகிழ்ச்சியை அடைகின்றேன்; உன்னுடைய மகனை தற்போது வைத்துக்கொண்டு மகிழும் பிரம்மாநந்தமான இன்பத்திற்கு ஓரெல்லையே இல்லை; அம்மா! உன்னிடம் எனக்கேற்பட்ட அபரிமிதமான அன்பின் முதிர்ச்சியால் இப்போது உன்னை ஒருமையாகவே அழைக்கத் தொடங்கி விட்டேன்; இதோ உன் மகனைப் பார்'' என்று கூறியவாறு அக் குழந்தையை மரகதத்திற்குக் காட்டினாள்.

அவள் தனக்குப் பிறந்துள்ள குழந்தை ஆண் குழந்தை என்பதையறிந்ததும் மகிழ்ச்சியைக் கொண்டு, அக்குழந்தையைக் கூர்ந்து கவனித்தாள். அப்போது அக்குழந்தையின் முகம், அவள் நீரில் மூழ்கியிறக்கத் துணிந்தகாலத்தில் அக் குளத்தில் கண்ட உருவத்தின் முகத்தைப் போலவே யிருந்தது. ஒரு சமயம் அவளுடைய பர்த்தாவின் முகத்தைப் போலவும் தோன்றிற்று. அவ்விதமான தோற்றங்களினால் அவள் மிகுந்த சோகத்தை யடைந்து பழங்கால வர்த்தமானங்களை யெல்லாம் நினைத்துக் கண்கலங்கலானாள்.

இதைக் கண்ட அம்புஜாவும் சிறிது வருத்தத்தையடைந்து, அவளை நோக்கி, "அம்மா! இப்போதுனக்கு ஏற்பட்டிருக்கும் துயரத்தால் நீ வருந்துவது நியாயமே; எனினும் இந்நிலைமையில் நீ வருந்துவதால் உன் தேக சுகத்திற்குக் கேடு நேரும்; ஆகையினால் நீ கலங்காதே; இதோ உன் குழந்தை கண்ணைத் திறக்கின்

றது பார்'' என்று குழந்தையின் முகத்தை அவளுக்குக் காட்டி அவளைத் தேற்றினாள். பின்னர் மரகதம் சற்று சமாதானமடைந்தவளாய்த் தன் கவலை முற்றும் மனத்திற்குள்ளடக்கிக் கொண்டு கவனத்தை அக் குழந்தையின் மேல் செலுத்தலானாள். குழந்தையின் பால்வடியும் முகத்தைப் பார்க்கப்பார்க்க அவளுடைய மனம் சொல்லொணாத்துயரத்தினால் பீடிக்கப்பட்டுக் கலங்கத் தொடங்கியது. அவ்வகைக் கலக்கத்துடன் அவள் அக் குழந்தையின் முகத்தைப்பார்த்து, "அப்பா! மைந்தா! உன்னை, உன் வேண்டுகோளின்படியே நான் இப்பூமியில் சேர்த்துவிட்டேனடா; எனது கடன் முடிந்துவிட்டது; கண்ணே இனி நான் என்னுயிரைத் தாங்கித் திரிவது அனுவசியமாகும்'' என்று தனக்குள் சொல்லிக்கொண்டாள்.

அதன் மேல் பிரசவத்தாலுண்டாகும் அசுகம் ஒன்றுமில்லாமல், சௌக்கியமாகவேயிருந்து 10 தினங்களும் கடந்து ஸ்நானமும் செய்தாள். அதற்குமேல் அவள் முன்னே தீர்மானித்திருந்த காரியத்தைச் செய்யவேண்டியதைப் பற்றி யோசித்தாள். ஆனால் ஒரு விதமான முடிவும் ஏற்படாமல் அவள் மனம் குழம்பிக் கொண்டிருந்தது. குழந்தையைப் பார்க்குந் தோறும், 'இத்தகைய கைக் குழந்தையை நாம் விட்டு உயிர் துறந்தால் இஃதெப்படிப் பிழைக்கும்' என்ற ஒரு பெருங்கவலை அவள் மனத்தில் எழுந்து கொண்டிருந்தது. அதனால் அவள், தன்னுடைய தீர்மானத்தை நிறைவேற்ற முடியாமல் தவித்தாள். பின்னர் அவள், நிரம்பவும் துயரத்தையடைந்து, "அந்தோ! நாம் இப்போது இக் குழந்தையைக் கதற விட்டுச் செல்லுவது மாகா பாதகமாகும்; ஆதலால், சில தினங்கள் வரையில் கஷ்டப்பட்டாவது உயிரைத் தாங்கிக் கொண்டிருந்து இக் குழந்தை சற்று பெரிதான வுடன் இதை நம்முடைய பிராணபதியிடம் சேர்ப்பிக்கும் மார்க்கத்தைச் செய்து விட்டு, அதன் மேல் இறந் தொழிவதுதான் தகுதியானதாகும்'' என்று தீர்மானித்துக் கொண்டாள்.

இவ்வித தீர்மானத்துடன் மரகதம் அங்கிருந்து, சில தினங்களைக் கழித்தாள். அம்புஜா மரகதத்தின் குழந்தையைச் சற்றும் கீழே விடாது சீராட்டித் தாலாட்டி அதற்குப் பாலூட்டி நீராட்டி

விளையாட்டுக் காட்டி, அணிகளைப் பூட்டி, வெகு பக்ஷமுடன் வளர்த்து வந்தாள். மரகதத்திற்கும் ஓர் குறைவும் நேராதபடி ஓர் உயர்ந்த ஜாதிக் கிழவியைக் கொண்டு சமையல் செய்து போடும்படி செய்து அவளை அன்புடன் போஷித்து வந்தாள்.

மரகதம் மகவின்று ஒருமதியும் கடந்தது. அதன் மேலும் அவளால் தன்னுடைய துயரைச் சகித்துக் கொண்டிருக்க முடியவில்லை. அதனாலும், குழந்தை பெரிதாகிவிட்டதாலும், தன் தீர்மானத்தை நிறைவேற்றக் கருதி ஒரு நாளிரவு அம்புஜா நித்திரை கொண்ட பின்னர் மெல்ல எழுந்து ஓசையின்றி அம்புஜாவின் மேஜை யருகிற் சென்று, சில கடிதங்களை யெழுதி அவற்றில் இரண்டு கடிதங்களை அம்மேஜை மீதே வைத்து விட்டு, மற்ற கடிதங்களைத் தன் மடியில் வைத்துக்கொண்டு தன் குழந்தையின் தேகத்தில் அணிந்திருந்த ஆபரணங்களைக் கழற்றி அம்மேஜையின் மீதே வைத்து விட்டாள். தன்னை யாரும் கண்டு கொள்ளாதபடி தான் ஓர் துருக்கிய மாது போல உடை தரித்து முகத்தை மூடிக் கொண்டாள். பின்பு அக்குழந்தைக்கு பரிசாக சிலர் அளித்திருந்த ரூபாய் 15 மட்டும் தான் கையில் எடுத்துக்கொண்டு அம்புஜத்தினருகில் சென்று தாங்க வியலாத துயரத்தினால் கண்ணீர் பெருக அவள் முகத்தில் சில முத்தங்களை இட்டுத் தடவிகொடுத்து, "என்னுயிர்த் தோழி! நீ எனக்கு இப் பிறப்பில் செய்துள்ள உபகாரத்திற்கு நான் என் தேகத்திலுள்ள தோலைக் கொண்டு செருப்புத்தைத்து உன் காலுக் கணிவித்தாலும் அது ஈடாகமாட்டாது. நீ என்னை மிகுந்த அன்புடன் ஆதரித்ததற்குக் கைம்மாருக நான் உனக்கு என்னுடைய குழந்தையினுடையவும், என்னுடையவுமான பிரிவாற்ருமையை அளித்து விட்டுச் செல்கிறேன்" என்று கூறிக் கலங்கிய வண்ணம் தொட்டிலில் தூங்கிக்கொண்டிருந்த குழந்தையை மெல்ல எடுத்து மார்புடன் அணைத்துக் கொண்டு அடிமீதடி வைத்து நடந்து வீதிக் கதவைத் திறந்து கொண்டு வெளியே சென்று விட்டாள். அப்போது பொழுது விடியும் பின்னிரவு நேரமாக விருந்தது.

அவ் வேளையில் அவள் அக் குழந்தையை எடுத்துக் கொண்டு, நடக்கத் தொடங்கி, வால்டேர் இரயிலடியை அடைந்து சென்னை

க்கு ஓர் டிக்கட்டுப் பெற்றுக் கொண்டு சென்னை செல்லும் ரெயில் வந்தவுடன் பெண்கள் வண்டியில் ஏறினள். தான் முன்பு விசாக பட்டணத்திற்குச் சென்ற போதுண்டான பயமே அவளுக்கு அப் போதும் ஏற்பட்டு அவளை வருத்திக் கொண்டே இருந்தது. மேலும், அவள் தனது ஆருயிர்ச் செல்வனின் முகத்தை நோக்கும் போதெல்லாம் அவள் மனத்தில் அவளால் சகிக்க வியலாத வேதனை தோன்றி அவளை வாட்டிக் கொண்டேயிருந்தது.

அவளுடைய அழகிய விழியில் அருவிபோல கண்ணீர் வடிந்து அவள் மடியில் படுத்திருக்கும் சிசுவின் மீது பொட்டுப் பொட் டாகச் சொட்டிக் கொண்டிருந்தது. எனினும் அவள் அவ்வாறு அளவுக்கு மிஞ்சித் தோன்றியவிசனத்தை யுள்ளடக்கிக் கொண்டும், வண்டியிலுள்ள மற்ற பெண்பிள்ளைகளுடன் சாதாரணமாக வார்த்தையாடிக் கொண்டும், தான் தனித்துப் பிரயாணம் செய்வதற்குத் தகுந்ததோர் சாக்கு கூறிக்கொண்டும் பிரயாணத்தை நடத்திச் சென்னை ஸெண்டிரல் ஸ்டேஷனை யடைந்தாள்.

அவ்விதம் சேர்ந்தவுடன் மரகதம் தன்னை யாரும் கண்டு கொள்ளாதிருக்கும் பொருட்டுத் தான் முகத்தை மூடியிருந்த போர்வையை நீக்காமலே ரெயிலைவிட்டிறங்கி அங்கு அருகிலுள்ள சர்சவலை ராமசாமி முதலியார் சத்திரத்தை யடைந்து, அதில் இருட் டாக விருந்த ஓர் பாகத்தில் தனது குழந்தையுடன் அமர்ந்தாள். அவளுடைய மனமானது நிமிடந்தோறும் தாங்க வியலாத அபார மான சோகத்திலாழ்ந்து கொண்டே யிருந்தது. அத்துயரத்தால் அவள் ‘ஆ!’ என்று பெரு மூச்சு விட்டாள். பின்னர்க் குழந்தையை நோக்கி, “ஐயோ! என் செல்வா! இந்த மட்டோடு உனக்கு மெனக் கும் உள்ள சம்பந்தம் நீங்குகிறது; நான் இனி உன்னைக் காணவும் பாக்கியமில்லாப் பாவியாகி விட்டேனடா குழந்தாய்! ஐயோ! நீ முகம் பார்த்து நகைக்கும் நாளில் நான் உன்னை ஜகத்தோர் கண்டு நகைக் கும் வண்ணம் விட்டு விட்டுச் செல்லப் போகிறேனடா! என் கண் ணே! சிலமாதங்களுக்கு முன்னுல் குளத்து நீரில் நீ உனது முகத் தைக் காட்டி என்னிடம் வேண்டிக் கொண்டவாறு உன்னை நான் பூமியில் சேர்ப்பித்து விட்டேன்; என் செல்வக் குழந்தாய்! உனது

தந்தையின் பொருளாகிய நீ அவரிடத்தில் சேரும் மார்க்கத்தை நான் இப்போது செய்வதோடு என் துக்கமே நிரம்பிய பிறப்பையும் போக்கிக் கொள்ளப் போகிறேன்; இதனோடு என் பயங்கரமான கருமமும் தொலைந்து விடுகிறதடா என் ரத்தினமே! உன் தந்தை அளவற்ற படிப்பைப் படித்திருந்தும் அவருக்கு என் விஷயத்தில் சிறிதும் அப்படிப்பானது பயன் படாமற் போய் விட்டது; இதுவும் எனது பாவத்தின் பயனே; இது காறும் அவர் என் மீது கேவலமான எண்ணம் கொண்டு வந்திருந்த போதிலும் இனி மேல் உன்னைக் கண்ட பின்னராகிலும், அவ்வாறு கொண்டிருந்த கெட்ட அபிப்பிராயத்தை மாற்றும்படி அந்தக் கருணை வள்ளலாகிய கடவுள் அருள் பாலிப்பாரோ பாலிக்க மாட்டாரோ! ஹா! இனிமேல் அவர் அவ்வாறு அருள்புரிந்துதான் ஆவதென்ன? எனக்கு வரவேண்டிய துன்பங்கள் யாவும் வந்து முடிந்தபின்னர் அருள் எதற்கு? பொருள் எதற்கு? உம்; என்னருமை மைந்தா! ஆகா! என்னுருயிர்ச் செல்வா! என் கண்மணியே! உன்னுடைய முகத்தை நோக்கும் போதெல்லாம், உன் பிதாவையே நேரில் காண்பது போலான தோற்றம் அதிலுண்டாகின்றதடா! என் அன்பே! உனது முகமும், உன் தந்தையின் முகமும் ஒருவித அச்சினால் செய்யப்பட்டன போன்று உனது வதனம் காணப்படுகின்றதடா என் கண்ணே! ஐயோ! என்னருமைச் சுதனே; பாவியின் வயிற்றில் நீ பிறந்து தாயில்லாச் சேயாக வளரவோ வந்தாய்! ஐயோ! உன் தந்தை என்மீது கொண்ட சந்தேகமென்னும் பைசாசத்தினால் பீடிக்கப்பட்டவராயிருப்பதால் அந்த ஐயத்தைக்கொண்டே உன்மீதும் வெறுப்படைந்து உன்னைக் கவனியாமல் உனக்கும் இன்னல்கள் செய்வாரோ! 'கொடும்பாவி ஈன்ற மகனே!' என்று உன்னைக் காண்போர் வசையாகக் கூறுவார்களோ! 'பாதகி ஈன்ற கிராதகப் பயல்' என்பார்களோ! யார் யார் என்னென்ன கூறி உன்னை இழிவுபடுத்தி அழ வைப்பார்களோ! இவைகளையெல்லாம் எண்ணும்போது என் வயிறு பற்றி எரிகின்றதடா! செல்வமகனே!" என்று தனக்குள்ளாகவே கூறிப் புலம்பியவாறு துடித்தாள். தன்னை அந்நிலைமையில் பிறர் கண்டுகொள்வார்கள் என்ற பயம் ஒரு பக்கம் அவளை வருத்திற்று.

இவ்விதமான மனத் துயரங்களை யனுபவித்த வண்ணம் அவள் தனது குழந்தையைச் சேர்த்தணைத்துப் பலமுறை முத்த மிட்டுப் பின்னர் அதற்குப் பாலூட்டினாள்.

அத்தருணம், செண்டிரல் ஸ்டேஷனிலிருந்து திருவள்ளூருக்கு ரயில் கிளம்பும் நேரமாகிவிட்டது. மாகதவல்லி அதனை யுணர்ந்து உடனே அங்கிருந்து மெல்ல நடந்து செண்டிரல் ஸ்டேஷனை யடைந்து திருவள்ளூருக்கு ஒரு டிக்கட்டு வாங்கிக் கொண்டு தன்னைப் பிறர் பார்த்துச் சந்தேகிக்காதபடி குழந்தையுடன் பெண்கள் ஏறும் வண்டியில் ஏறி அமர்ந்தாள். அவளுடைய துயரம் விஷம் ஏறுவதுபோல மனத்தில் ஏறிக்கொண்டேயிருந்தது. அவள் அவ்வித ஆறாத்துயரத்துடனேயே தனது குழந்தையை அணைத்தவாறு பிரயாணத்தை நடத்தித் திருவள்ளூர் ரயிலடியை அடைந்தாள்.

அவ்வாறு தனது நாயகனின் ஊரை யடைந்ததும் அளவற்ற துயரத்தோடு தன் குழந்தையை அழவிடாது அணைத்தபடியே மெல்ல நடக்கலானாள். அப்போது இரவு சுமார் பத்து மணியிருக்கும். அவள் இரயிலடிக்குச் சிறிது சமீபத்திலேயே இருக்கும் தனது பிராணபதியின் வீட்டை நோக்கிச் சகிக்கவியலாதபடி பொங்கி யெழும் சோகத்தினால் புலம்பியபடியே நடந்து இரவு 11மணிக்கு அவ் வீடிருக்கும் வீதியை அடைந்தாள். அவ் வீதியில் ஓர் இடிந்த பாழ்ச் சத்திரம் உண்டு. அவள் அச் சத்திரத்தில் திண்ணையின்மீது உட்கார்ந்தபடியே எதிர்ச் சாரியில் 5-6-வீடுகளுக்கப்பாலுள்ள தன் வீட்டை நோக்கினாள். அந்தோ! அவளுக்கு அவ்வமயம் என்று மேற்படாத துக்கம் பொங்கி வந்துவிட்டது. பழையகால வர்த்தமானங்களெல்லாம் ஒன்றன் பின் ஒன்றாக அப்போதே நிகழ்வன போன்ற தோற்ற முண்டாகி விட்டது. அவள் அளவுக்கு மீறிய கலக்கத்தினால் தேகம் குலுங்க, மார்பு துடிக்க, வயிறு பற்றி எரிய, ஆவி சோர, அனலின் மத்தியில் நிற்பவள் போன்று இம்சை யடைந்து, "ஆ! என் பிராணகாந்தரே! என் இன்ப வள்ளலே! எனதாருயிர்க் கண்ணாளா!

தமது அன்பின் வடிவமாகிய பொருளை நான் இதோ கொண்டு வந்துவிட்டேன்; இதைத் தமது கையில் சேர்த்து விடுவதோடு எனது கடன் தீர்ந்துவிட்டது; இனி என்னுயிருக்கு ஓர் விமோசனம் பிறக்க ஏது ஏற்பட்டுவிட்டது" என்று தன் நாயகனை யெண்ணிச் சில வார்த்தைகள் சொல்லிவிட்டுப் பின், "இனியும் நாம் வீணான கால ஹரணம் ஏன் செய்யவேண்டும்? நமது கடமையைப் பூர்த்திசெய்துவிட்டு நாம் வந்த காரியத்தை முடித்துக் கொள்வோம்" என்று தீர்மானித்துக்கொண்டு குழந்தையின் முகத்தை நோக்கினாள். ஆகா! வானத்திலுள்ள சந்திரனே தன் மடியில் கிடப்பதுபோன்று ஜோதியுடன் விளங்கிய குழந்தையைப் பார்த்ததும், "அந்தோ! இதை நாம் எவ்விதம் பிரிந்து செல்வோம்!" என்று சோகித்து, அக்குழந்தையின் முகத்தை நோக்கி, "ஆ! என் செல்வக் கண்ணே! சிங்கார துரையே! உன்னைப் பிரிந்து செல்லும் தருணமும் நெருங்கிவிட்டதடா என்னருமைக் கனியே! ஐயோ! யான் இவ்விளம் பிராயத்தில் இத்தகைய கொடிய சம்பவங்களை யெல்லாம் அனுபவிக்கவோ பெண் பிறந்தேன்! ஆ! இத்தகைய பெண்ணாய்ப் பிறப்பதை விடப் பேயாய் அலைந்து திரிவது மேலன்றோ! உயரிய குலத்திலுதித்து ஒப்பிலாச் செல்வத்தில் வளர்ந்து, உத்தம சகவாசம் செய்து, மன்மதன் போன்ற மணவாளனை மணந்து, உன்னையும் கருவில் தாங்கியும் எனது பழைய தீவினையால் இவ்வாறு பல இன்னல்களை அனுபவித்து மனம் வெதும்பி முடிவில் இக் கதியை யடைந்து, உன்னதமாகிய ஆண்மகவாக ஜெனித்த உன்னையும் பிரிந்து, கன்னலினும் இனிய வென்காதலரையும் பிரிந்து, என்னரும் பெற்றோரைத் துறந்து, பன்னக சயனனின் பதம் போய்ச் சேரப்போகின்றேன்; என் தங்கக் கட்டியே! எனக்கு இதுகாறும் ஏற்பட்ட வருத்தங்களைக் காட்டிலும் இப்போது உன்னைப் பிரிவதனாலுண்டாகும் வருத்தம் சிறிதேனும் சகிக்க முடியாததாயிருக்கிறதே! நான் என்ன செய்வேன்? இதற்கோ நீ என் வயிற்றில் ஜனித்தாய்? என் செல்வா!...." என்று கூறி அக் குழந்தையைப் பலதரம் முத்தமிட்டாள்; மீண்டும் அணைத்துக்கொண்டாள்; பின்னும் மடியில் கிடத்தினாள். பின்னர் அவள் ஒருவித தெளிவடைந்து,......."ஆகா இதென்ன

இது! நாம் வீணான மாயையில் சிக்கி மனஞ் சிதறுண்டு வருந்துகின்றோமே! நாம் யார்? இந்தக் குழந்தை யார்? இவ்வுலகம் என்ன சதம்? அடாடா! இதென்ன மூடத்தனம்! நம்முடைய தேகத்திற்கும் ஆத்மாவுக்குமே சம்பந்த மில்லை; ஆத்மா அழியாப் பொருள்; தேகம் அநித்தியமானது; இன்று ஆத்மா இத்தேகத்தை விட்டுக் கிளம்பிவிட்டால் அடுத்த க்ஷணமே இது நாற்ற மெடுத்து விடும்; அப்பேர்ப்பட்ட ஊற்றைச் சரீரமல்லவா இது; ஆவி நீங்கிய பின் இச் சரீரத்தை அரை நிமிடமேனும் யாரேனும் வைத்துக் கொள்வார்களா! கேவலமான இச்சரீரமானது,

> கனவைப் போலவுங் கானலினீருடன்
> றனிசெயிந்திரஜாலத்தைப் போலவு
> மனனின் கற்பனை யான்வரும் யாக்கையை
> வினையின் கட்டற மெய்யெனற் பாலதோ
>
> பாகவதம்

என்றபடி கனவிற் காணும் பொருளுக் கொப்பானதாயும், கானல் நீருக்கு நிகரானதாயு மிருக்கின்றது. இத்தகைய யாக்கையைப் பற்றிப் பெரியார் கூறியுள்ளவைகளை எண்ணிப் பார்க்குந்தோறும் இவ்வுடல் அநித்திய மென்பதை உள்ளம் நன்குணருகின்றது; இத்தகைய ஆபாச உடலினுதிக்கும் ஆசையும், அன்பும் நிலையற்றனவே; நீரின்மேல் கிளம்பும் குமிழி போன்றனவே; இவ்வாறு இந்தச் சம்சார சாகரத்திலுண்டாகும் பாசபந்தங்களை நிச்சயமானவைகளெனக்கொள்வது மதியீனம்; சிச்சீ! இந்தக் குழந்தைக்காக நாம் ஏன் கவலைப்படவேண்டும்! இந்தப் பொருள் யாருடையது? இது எவ்விதம் எங்கிருந்து யாரால் உண்டாக்கப் பட்டது? இவற்றை ஆலோசித்தால் இதற்கும் நமக்கும் எவ்வித சம்பந்தமு மில்லை யென்பது தானே விளங்கும்; அறியாமையால் நம்மனத்தில் இதன் விஷயத்தில் ஒரு பாச மேற்பட்டிருக்கிறது. அதை உடனே நீக்கிவிடவேண்டும்; நாம் உபயோகமற்ற பாசக் கயிற்றால் ஏன் கட்டுப்பட்டுப் பரிதபிக்கவேண்டும்! தாய்க்குச் சேயைக் கருப்பத்தில் தாங்கிக்கொண்டிருப்பதுதான் கடமை; சிசு வெளிப்பட்டபின் அத்தாய்க்கும் சேய்க்கும் ஒருவித சம்பந்தமு

மில்லை; இச் சிசு யாரோ! நாம் யாரோ! நாம் இப்பூமியில் வந்த வேலை இதுபரியந்தம் ஈசன் விதித்திருந்தபடி நடந்துவிட்டது, இனி அவன் விதியால் நமது மதி செல்லும் வழியில் நாம் சென்று நமது கடனை முடித்துவிடுவோம்'' என்று வேதாந்த மார்க்கத்தில் தன்னுடைய கவனத்தைச் செலுத்தினாள்.

அவ்விதம் செலுத்தவே அம் மடந்தைக்கு உலகப் பற்று நீங்கிவிட்டது. அதன்மேல் அவள் தீர மனத்துடன் சிறிதும் தயங்காது தனது குழந்தையை, இரக்க மின்றி எடுத்துக்கொண்டு போய்ச் சரேலென்று தன் வீட்டின் தெருத்திண்ணையில் ஒரு துணியைப் போட்டு அதன்மேல் கிடத்தி, அதன் பக்கலில் ஒரு கடிதச் சுருளையும் வைத்துவிட்டு, அவ் வீட்டின் வாயிலில் நின்று தன் பிராண காந்தனை மனத்தில் எண்ணிச் சாஷ்டாங்கமாக நமஸ்கரித்து, ''என் பிராணேசா! தமது பொருளைத் தம் வீட்டு வாயிலில் நான் சேர்த்து விட்டேன்; நீங்கள் ஜாக்கிரதையாக எடுத்துக் காப்பாற்றிக் கொள்ளுங்கள்'' என்று தனக்குள் கூறியவாறு குழந்தையின் முகத்தை பின்னும் நோக்கி அதற்கு முத்தமிட்டுக் கண்ணில் நீர் சொரிந்த வண்ணமாக, ''என் மைந்தா! யான் செல்கிறேன்'' என்று மனத்தைச் சிறிதும் தளரவிடாமல் துணிபுடனேயே அவ்விடத்தை விட்டுக் கீழே இறங்கி வீதியை யடைந்தாள்; மீண்டும் வீட்டை நோக்கினாள்; தன் பிராணபதியின் பெயர் பதித்த பலகை வீதியில் தொங்குவதைக் கண்டாள்; மனத்திற்குள் மிகுந்த துயரத்தையடைந்தாள். பின் அவ்விசனத்தோடு அங்கு நில்லாமல் விசையாக நடக்கத் தொடங்கினாள். அதன் மேல் தன்னையே மறந்தவளாய் உன் மத்தம் கொண்டவள் போல ஆவேசமாக நடந்து சென்று ரயிலடியை அடைந்தாள். அப்போது பின்னிரவு 4 மணி சமயமாயிருந்தது. அவள் அங்குப் போனவுடன் ஒரு புகை வண்டி கிளம்பியது. அவ்வண்டி எங்குச் செல்வதென்பதைக் கூட அவள் விசாரிக்காமலும், பிரயாணச் சீட்டு வாங்காமலும் அவ் வண்டியில் ஏறினாள். பின், வண்டி புறப்பட்டு வேகமாகப் போய்க் கொண்டிருந்தது. அவ்வாறு சென்று கொண்டிருக்கையில் நமது மாதரசியாகிய மரகதமணி கடவுளையும் கணவனையும் துதி செய்த

வாறு வெகு துணிபுடன் உயிரை விடத் துணிந்து திடீரென்று அவ் வண்டியிலிருந்து கீழேவிழுந்து விட்டாள். அந்தோ! பரிதாபம்! பரிதாபம்!! அவ் வண்டியில் விழித்திருந்த சிலர் அவள் அவ்வாறு விழுந்ததைக் கண்டு "கூ கூ" வென்று கத்தியவாறு நடுக்கலுற்று ஸ்தம்பித்துவிட்டார்கள்.

## பிழை திருத்தம்

| பக்கம் | வரி | பிழை | திருத்தம் |
|---|---|---|---|
| 44 | 5 | கோமுட்டியின் | ஒருவனின் |
| ,, | 8 | க்கோமுட்டி | மற்றொருவன் |
| 378 | 17 | சாணுனும் | ஒருவனும் |
| 379 | 21 | அந்தச் சாணுனையும் | அவனையும் |

நமது பத்திரிகையில் ஒரு குற்றமும் தோன்றாது கதைப் போக்கில் வழங்கிய சொற்கள் நமது தேயத்து சில வகுப்புச் சகோதரர்க்கு வருத்தத்தை உண்டுபண்ணலாமெனத் தெரிவதால் மேற்கூறிய பிழை திருத்தங்களை இங்கு செய்துள்ளோம்.

ப-ர்.

## 14—வது அதிகாரம்

### குணமிலா நோயும்—மணமிலாத் திருமணமும்

10-வது அதிகாரத்தின் இறுதியில் கூறியபடி, ருக்மிணியின் வார்த்தையையும், ராஜேஸ்வரியின் வார்த்தையையும் தட்டிவிட்டுச் சிறிதும் இரக்கமின்றித் தாமோதரனின் மீது அடங்காத கோபம் கொண்டு ரங்கோனுக்குப் பிரயாணமாகிய கண்ணபிரான் நேரே ரயிலடியை அடைந்து, கல்கத்தாவிற்குப் பிரயாணச் சீட்டுப் பெற்றுக் கொண்டு மந்திரவாதியுடன் 2-வது வகுப்பு வண்டியில் ஏறிச் சென்றான். அக்கண்ணபிரானின் ஆத்திரத்திற்கோ எல்லையே இல்லை. அவனுடைய மனமானது, "தாமோதரனை எப்பொழுது காணலாம்; எப்போது அவனுடைய வஞ்சகச் செய்கைக்குத் தக்கபடி அவனுக்குத் தண்டனை ஏற்படுத்தலாம்" என்ற நோக்கத்திலேயே இருந்தது. இதற்கனுகூலமாக மந்திரவாதியும் அவனுடைய கோபமாகிய தணலில் ஆத்திரமென்னும் புகையெழும்படி மித்திரபேத வார்த்தைகளாகிய சாம்பிராணியைத் தூவிக் கொண்டேயிருந்தான். கண்ணபிரான் மனத்திலிருந்த ஆத்திரத்தின் மிகுதியினால் அவன் எண்ணாத எண்ணமெல்லாம் எண்ணியபடியே வேறு வித சம்பாஷணை எதுவுமின்றி மௌனமாகவே அன்று இரவைக் கடத்தி, மறுதினத்தையும் போக்கிக் கல்கத்தாவை யடைந்தான்.

அவன் போன தினத்தன்று ரங்கோனுக்குக் கப்பல் புறப்படாமையால் அன்று அங்குத் தங்கும்படிநேர்ந்து விட்டது. அவ்வாறு தங்கியிருக்கும் போது திடீரென்று கண்ணபிரானுக்குக் கடுமையான ஜுரங் கண்டு விட்டது. முதலில் ஜுரம் வரும்போதே பலமாக வந்து விட்டதால் மந்திரவாதியும், கண்ணபிரானும் பயந்து விட்டார்கள். பின்னர் இருவரும் யோசித்து தமது ஊருக்குத் திரும்பி, உடம்பு குணப்பட்ட பின்னர் ரங்கோன் செல்வதே உசிதமென்று தீர்மானித்துக் கொண்டார்கள். கண்ணபிரான் மனத்தில், தான் புறப்படுகையில் தன் மகளும், மனைவியும் தடுத்த அபசகுனத்

தாலேயே தனக்கு ஜுரம் வந்து விட்டது என்ற அபிப்பிராயம் குடி கொண்டு விட்டது. அவன் அவ்விதமான அபிப்பிராயத்தால் மனக் கொதிப்படைந்து அவ்வூரிலுள்ள ஓர் வயித்தியரிடம், தத்கால சாந்தியாக மருந்து வாங்கிச் சாப்பிட்டு விட்டு அன்று அவ்விடத்தில் தங்கி மறுதினம் ரயிலில் புறப்பட்டு ருக்மிணியும் ராஜமும் எதிர்பாராத விதமாகத் தன் வீடு வந்து சேர்ந்தான்.

அவன் திரும்பி வீட்டிற்கு வந்த காரணத்தை யூகத்தினுல் அவ்விருவரும் அறிந்து கொண்டார்கள். கண்ணபிரான் அவர்களுடன் உரையாடவே இல்லை. கண்ணபிரானின் ஜுரம் நாளுக்கு நாள் அதிகரித்துக் கொண்டே வந்தது. அந்த ஜுரம் (டைபாய்டு) விஷ ஜுரமென்று வைத்தியர்கள் கூறி அதற்கு வெகு சிரத்தையுடன் மருந்து கொடுத்துக் கொண்டு வந்தார்கள். கண்ணபிரானுக்கு எதிர்பாரா விதமாக பலத்த நோய் கண்டு விட்டதனுல் ருக்மிணியும், ராஜமும் அதிகமான மனவேதனையடைந்து, வெகு கனிகரத்துடன் அவனுக்குப் பெரிய பெரிய மருத்துவர்களைக் கொண்டு சிகிச்சை செய்து வந்தார்கள். அச் சிகிச்சைகளால் நோய் தணியவேயில்லை. கண்ணபிரான் சிக்கில் படுத்து மாதம் மூன்ருகி விட்டது. அதனுல் ருக்மிணியும், ராஜமும் மிக்க திகிலடைந்தார்கள். தங்களுடைய குடும்பத்துக்கே ஏதோ பெருத்த ஆபத்து சம்பவித்து விட்டதாக எண்ணித் துடித்தார்கள். கண்ணபிரானின் தேகத்தில் சத்தேயில்லாமற் போய்விட்டது; அவனுடைய உயிர்மட்டும் ஒரு சிறிது ஊசலாடிக் கொண்டிருந்தது. அவனுக்கு உண்டாகி யிருந்த ஜுரத்தோடு பாரிசவாயுவும் கூடக் கலந்து கொண்டது. அதனுல் அவனுடைய கைகால்கள் சுவாதீனமற்று விட்டன. வாயும், கண்களும் கோணலாக மாறுபட்டு விட்டன.

இவன், இங்ஙிலையிலிருக்கும் பொழுது, மற்ருெரு அதி விநோதமான சம்பவம் நிகழ்ந்தது. அதாவது, முந்தின அதிகாரத்தின் இறுதியில் நமது மின்னிடை மாதரசியாகிய மரகதமணி தன்னுடைய குழந்தையைத் தனது நாதனிடம் சேர்த்துத் தன் மனேபீஷ்டத்தை நிறைவேற்றிக்கொண்டு சென்ருளென்று நாம் கூறியிருக்கின்ருேமல்லவா? அவள் அவ்வாறு அக் குழந்தையை வைத்து விட்டுப்

போன பின்பு, அது 30 நாட்களை நிரம்பப் பெற்ற பச்சைக் குழந்தை யாதலால், கை கால்களை உதறிக் கொண்டு குளிரினால் தேகம் விறைத்து வீறு வீறென்று கத்தத் தொடங்கியது. அதன் நிலைமை அங்ஙனமிருப்ப, அவ்வீட்டினுள்ளிருந்த கிழவி, தணிகாசலம் ஆகியவர்களின் நிலை எப்படியிருந்ததெனில் மிகப்பரிதபிக்கக் கூடியதாயிருந்தது. தணிகாசலம், மாரகதவல்லியாகிய உயிரைப் பிரிந்த நாள் முதல் நடைச் சவம் போல ஆகிவிட்டான். தான் அறியாமையால் செய்த காரியமானது, தன் நிலைமையைப்பார்த்து உலகம் நகைக்கவும், உற்றார் உறவினர் தன்னை இகழ்ந்து வெறுக்கவும் ஏதுவாகி விட்டபடியாலும், எவருக்கும் கிடைப்பதற்கரிதான புத்திரப் பேறு தனக்குக் கிடைக்க விருந்தும் அப்பேறு தனது மந்தமதியால் கை தவறி விட்டதாலும், தான், தனது மூடத்தன்மையால் நெருப்பைச் சோதிப்பது போல தன் மனைவியாகிய கற்பரசியின் கற்பைச் சோதிக்கத் தொடங்கி அதன் பொருட்டு மகா குற்றமுடைய அபாண்டமான பொய்களை யுரைத்துத் தீராத இடர்க்கடலில் மூழ்கியதாலும், முதல் குற்றத்தை மறைக்கத் தொடங்கிப் பின்னர்ப் பல பொய்களைக் கூறி அதனால் மிகுந்த அபராதியாகி விட்டதாலும், மாரகதவல்லியின் விஷயம் ஒரு சிறிதும் தெரியாமல் போய் விட்டதாலும் மிக்க மனவேதனையடைந்து எண்ணாத எண்ணமெல்லாம் எண்ணி எண்ணி மனம் புண்ணாகி, எண்ணிலாத கவலை கொண்டு கண்ணீர் வடித்துக் கருத்தழிந்து, ஊக்கமற்று, உணர்வு சோர்ந்து, மெய்தளர்ந்து, தீயின் மத்தியிலகப்பட்ட புழு வெனத் துடித்து ஊணுறக்கமின்றி மேலும் மாரகதத்தைத் தேடத் தொடங்கி, தனது காலத்தை யெல்லாம் அவளைத் தேடுவதிலேயே செலவிட்டுத் தன் உயிரையும் லக்ஷியம் செய்யாமல் தன்னாலான வரையில் 4–5 மாதங்கள் வரை எங்கெங்கோ தேடியலைந்தான். அதன் மூலம் அவன் தனது வக்கீல் தொழிலையும் கவனியாது கைவிட்டான். சதா அல்லும் பகலும் அனவரதமும் மாரகதவல்லியின் நினைவாகவேயிருந்து ஒரு பித்தன் போலாகிவிட்டான்.

மாரகதவல்லியின் விஷயமாகத் தான் தனது மாமி மாமனிடத்தில் பொய்யுரைத்ததின் பலனாகத் தன்மாமனாராகிய கண்ணபிரான்

தாமோதரன் மீது அடாத எண்ணத்தை மந்திரவாதி மூலமாகக் கொண்டு அவனைத் தண்டிக்க ரங்கோன் செல்ல விருந்த விஷயத்தையும் பின்னர்க் கடுமையான நோய்கொண்டு படுத்து விட்டதையும் இடையிலறிந்து கொண்டான்.

அங்ஙன மறிந்தும் அவ்விடம் சென்று தன் மாமனுரைப் பார்ப்பதற்கு மிகுந்த பயத்தையும், லஜ்ஜையையும், வருத்தத்தையுமடைந்து அங்குச் செல்ல முடியாமலிருந்துவிட்டான். அப்படியிருக்கும்போது மரகதவல்லி தன் குழந்தையை அவன் வீட்டு வெளித்திண்ணையில் போட்டுவிட்டுச் சென்ற அன்று, மனத்திலெழுந்த வருத்தத்தைத் தாங்கமாட்டாமல் மரகதவல்லியின் புகைப்படத்தை எடுத்துக் கையில் வைத்துக்கொண்டு அதைப் பார்த்துக் கோவெனக் கதறி யழுதுகொண்டே யிருந்து சோகத்தின் முதிர்ச்சியினுல் நித்திரையி லாழ்ந்து மெய்ம்மறந்து தூங்கி விட்டான். அப்போதுதான் மரகதவல்லியால் வெளியிற் போடப்பட்ட குழந்தை குளிர் தாங்கமாட்டாமல் அழுதது. அவ்வழுகைக் குரல் கனவில் தோன்றுவது போல அவன் செவியிற் கேட்டது. அதனுல் அவன், சிறுகச் சிறுக நித்திரை கலைந்து திடீரென்று விழித்துக்கொண்டான். அப்போது குழந்தையின் அழுகுரல் கேட்டதைக்கனவோ நினைவோ என்று சந்தேகித்து அசைவற்று அக்குரலைச் சற்று கவனித்தான். அங்ஙனம் கவனித்ததில், அங்குக் கேட்ட அழுகுரல் சமீபத்தில் உண்மையாகவே கேட்கிறதென்று தெரிந்துகொண்டான். அவ்வாறு தெரிந்துகொண்டவுடனே அவன் எழுந்து அங்குச் சிறுக எரிந்துகொண்டிருந்த விளக்கைப் பெரியதாக ஏற்றிவிட்டு அவ்வறையின் கதவைத் திறந்தான்.

அங்ஙனம் திறந்ததும், "திடீரென்று நம்முடைய வீட்டில் சமீபத்தில் சிறிய குழந்தையின் அழுகுரல் கேட்பதற்குக் காரணம் யாது? ;இங்கு இவ்வேளையில் குழந்தையுடன் யார் வந்திருப்பார்கள்?" என்று யோசித்தவாறு கூடத்தை யடைந்தான். அதே தருணம் கிழவியும் அவ்வழு குரலைக் கேட்டுத் திடுக்கிட்டுக் கண் விழித் தெழுந்து அதைப் பற்றி யோசித்தவாறு

நடையை அடைந்தாள். தணிகாசலமும் நடையிற் போய்ச் சேர்ந் தான். அவ்வாறு இருவரும் நடைப் பக்கம் சென்றதும் குழந்தை யின் அழுகை அவ்வீட்டு வீதியின் பக்கமாகவே கேட்கிறதென் பதை உணர்ந்து வெகு வியப்படைந்து வீதிக் கதவைத் திறந் தார்கள்.

அவ்வாறு திறந்ததும், அவர்கள் சந்தேகித்தவாறு வீட்டுத் தெருத் திண்ணையின்மீது சுவர்ண விக்கிரகம் போன்ற அக் குழந்தை கை கால்களை உதறிக்கொண்டும், தொண்டை கிழியும் வண்ணம் பெருத்த சத்தமிட்டுக் கத்திக்கொண்டும் கிடந்தது. அதைக் கண்டதும் கையில் விளக்கை எடுத்துக்கொண்டு அவர்கள் குழந்தை யின் அருகில் சென்று அதை நன்ருக உற்று நோக்கிக் கவனித் தார்கள். ஆகா! அக்குழந்தையின் முகத்தைப் பார்த்ததும் அவ்விருவரும் அப்போது அடைந்த வியப்பிற்கும், திகைப்பிற்கும், துக்கத்திற்கும் அளவே யில்லை. அவர்கள் மேலும் அக் குழந்தை யின் பக்கலில் வேறு யாராவது இருக்கிருர்களா வென்று பார்த்தார் கள். அங்கு யாரு மில்லை. ஆனுல் மரகதம் வைத்த கடித மடிப்பு மட்டும் இருந்தது; அதனேடு அவள் குழந்தைக்கு அடியில் விரித்த துணியு மிருந்தது. அத்துணியை அவ்விருவரும் கவனித் தார்கள்; உடனே அந்தத் துணி மரகதவல்லியின் புடவை என்பதை இருவரும் நொடியில் அறிந்துகொண்டார்கள். இதை யறிந்ததும் இருவரும் திடுக்கிட்டு "ஆ! இத்துணி மரகதவல்லியின் சேலையா யிற்றே!" என்று அதிசயித்தார்கள். உடனே குழந்தையைக் கிழவி வாரி யெடுத்து மார்பிலணைத்தாள். தணிகாசலம் அங்குக் கிடந்த கடிதத்தை எடுத்துப் பார்த்தான். அதில் அவனுடைய பெயரும், விலாசமும் எழுதப்பட்டிருந்தன. எழுத்துக்கள் மரகதவல்லியின் எழுத்துக்களாக விருந்தன. அவற்றை அவன் தெளிவுறத் தெரிந்துகொண்டான்; கிழவியும் தெரிந்துகொண்டாள்.

அவ்விதம் தெரிந்துகொண்ட அவ்விருவருக்கும் பெரிய பிரமையுண்டாகிவிட்டது; ஒன்றுமே தோன்றவில்லை; பெரிய ஆச்சரியக் கடலில் அவர்கள் மூழ்கிவிட்டார்கள். அந்நிலையில், 'இக்குழந்தை யாருடையது? இத்துண்டுத் துணியும், கடிதமும்

இங்கே எவ்விதம் வந்தன?' என்று யோசித்தார்கள். அவ்விவரங் களில் எதையும் அவர்களால் அறிந்துகொள்ளக் கூடவில்லை. பின்னர், அவ்விருவரும், தாங்கள் வீதியில் நள்ளிரவில் விளக்குட னும் ஓர்குழந்தையுடனும் நிற்பதைப்பிறர் கண்டுவிட்டால் ஏதேனும் சந்தேகிப்பதற் கிடமாகும் என்று எண்ணி அக்குழந்தையையும், துணியையும், கடிதத்தையும் எடுத்துக்கொண்டு உள்ளே சென்று பழயபடி கதவைத் தாளிட்டுக்கொண்டு கூடத்தை யடைந்து விளக் கின் உதவியால் குழந்தையை நன்றாகநோக்கினார்கள். குழந்தையின் முகம் தணிகாசலத்தின் உருவத்தைப் போலவே காணப்பட்டது. உடனே அவ்விருவருக்கும் அடக்க முடியாத துக்கம் மீறிவிட்டது. அப்போது கிழவி, தணிகாசலத்தை நோக்கி, "ஐயோ! அடே பாவி! தணிகாசலம்! இன்றுவரையில் மரகதமணி உயிருடன்தான் இருந் திருக்கிறாள் என்பது இந்தக் குழந்தையின் மூலம் தெரிந்துவிட்ட தடா! ஐயோ இக் குழந்தை உன்னுடைய சாயலையே உரித்துக் கொண்டு வந்திருக்கிறதே! இது உன்னுடைய குழந்தை தான் என்பது ஐயமற விளங்குகிறது; ஐயோ! இன்னும் நாம் சந்தேகத்தை நிவர்த்தி செய்துகொள்ளும் பொருட்டு அவள் கடிதமும் வைத்துச் சென்றிருக்கின்றாள்! அதைப் படித்துப் பாரடா! ஐயோ! என் னுள்ளம் பற்றி எரிகின்றதே!" என்று கதறிப் புலம்பியவாறு கூறினாள்.

தணிகாசலம் ஒன்றும் தோன்றாமல் பித்துப் பிடித்தவன் போன்று குழந்தையை மாறி மாறிப் பார்த்துக் கண்ணீர் வடியக் கடிதத்தை எடுத்துப் பிரித்து அதைக் கிழவியும் கேட்கும்படி உரக் கப் படிக்கலானான். அதில் எழுதப்பட்டிருந்த விஷயங்களாவன:—

"எனது உயிரினு மினிய பிராணபதியின் சரணாரவிந்தங் களுக்கு,

பாவியாகிய மரகதவல்லி சாஷ்டாங்க நமஸ்காரம். எனது ஆருயிர்க் கண்ணாளா! தேவரீர் அடியாளை வெறுத்து விலக்கி, அன்னியருக்கு இப்பாவியைத் தத்தம் செய்து முறிச்சீட்டு எழுதிக் கொடுத்துவிட்டீர்கள். அதன்மேல் சண்டாளி யான் பழயகாலத்து



182850

முறைப்படி தங்களிட முள்ள உரிமையை யிழந்துவிட்டேன்; எனினும் கடவுள் கட்டளைப்படி என்னைத் தங்களுக்கு நான் அக்கினி சாட்சியாக அர்ப்பணம் செய்தது மட்டும் உலக முள்ளளவும் அழியாது என்பதை யான் கூறவேண்டுவதில்லை; அப்படி யிருந் தாலும் தங்களுக்கு வெறுப்புள்ளவளாயிருக்கும் நான் கடித மெழுதி அக் கடிதத்தை அனுவசியமாகப் படிக்கும் சிரமத்தையும் கொடுக்கக் கூடாதென்றே இதுவரை ஒன்றும் எழுதாமலிருந்தேன்; இப்போ தெனக்கு முடிவுகாலம் ஏற்பட்டுவிட்டதால் கடைசியில் தெரிவிக்கவேண்டிய சில விஷயங்களைத் தெரிவிப்பதற்கு இக் கடிதத்தை எழுதினேன்; தங்களுடைய பொருளாகிய இச் சிசுவை கடந்த 5 மாத காலமாகச் சுமை தாங்கியைப் போல சுமந்து திரிந்தேன்; ஒரு மாதத்திற்குமுன் இப்புத்திரன் பிறந்தான். தம்முடைய பொருளாகிய இப்பிள்ளையைப் பெற்றுத் தம்மிடம் சேர்க்கும் பொருட்டே நான் இதுபரியந்தம் இப்பாழும் உடலைச் சுமந்துவந்தேன்; இப்போது என் கடமை தீர்ந்துவிட்டதால் என்னுயிரைப் போக்கிக்கொள்ளத் தீர்மானித்து மிக்க சந்தோஷத் துடன் உங்கள் உயிராகிய-உங்கள் பொருளாகிய-உங்கள் குழந்தை யாகிய-இச் சிசுவை உங்களிடம் சேர்த்துவிட்டேன்; இனிமேலாவது வீணாக ஐயமென்னும் பிரமராக்ஷஸுக்கு உங்கள் மனத்தில் இடங் கொடுக்கமாட்டீர்களென்று நான் நம்புகிறேன்; என் காதலரே! நான் கடைசியாகத் தங்களை யொன்று வேண்டுகிறேன்; அதாவது நீங்கள் என்னை வெறுத்து விலக்கியதுபோல இக் குழந்தையையும் விலக்காமல் ஆதரித்து எனது ஆத்மா சாந்தியடையும் வண்ணம் செய்வதுடன் என்னருமைப் பெற்றோருக்கும், என்னுருயிர் ராஜத்திற்கும் இக்குழந்தையைக் காட்டி என்னுடைய வந்தனத் தைச் சொல்லவேண்டுகிறேன்; நாதா! என்னை பைராகி இழுத்துச் சென்றுவிட்டதாக ஒரு கட்டுக் கதையைத்தாங்கள் அன்னவரிடத் தில் கூறியிருக்கின்றீர்கள்; அதை யான் பேப்பர் மூல மறிந்தேன். அதைப்போலவே இப்பொழுதும் ஏதேனும் கூறி இக் குழந்தையை அவர்களுக்குக் காட்டிவிடுங்கள்; அதுவே எனக்குப் போதுமானது; இந்த 5 மாதகாலமாக யான் என்னவிதமாக ஜீவித்தேனென்பதைத் தாங்களறிய விரும்பமாட்டீர்கள்; அதனாலேயே நான் அவ்

விஷயத்தை இதில் எழுதவில்லை; நமது பாட்டியாருக்கு எனது வந்தனத்தைக் கூறுங்கள்; அதிகம் எழுதுவதற்கு எனது மனமும், கையும் இசையவில்லை யாதலால் இத்தோடு கடிதத்தை முடிக்கின்றேன்; இப் பூமி சம்பந்தத்தையும் இன்றோடு ஒழித்துவிட்டேன்; நமஸ்காரம். எனக்கிதுகாறும் 5 மாதகாலமாக உதவிபுரிந்த மனிதர்களின் மூலமே இக்கடிதமும், குழந்தையும் தம்மிடம் சேர்ந்துவிடும்; அடியாளின் அடியும் இனி அங்குக் காணப்படாது; பேதை யான் தெரிந்தும் தெரியாமலும் செய்துள்ள சகலமான குற்றங்களையும் மன்னித்து எனது ஆவி நிம்மதியாக நீங்கும்படி தாங்கள் ஆசீர்வதிக்கவேண்டும்.

இங்ஙனம்
தங்களடிமை
மரகதவல்லி.''

என்பவைகளே. இவற்றைப் படிக்கும்போதே கிழவி சகிக்கவியலாத வருத்தமேலீட்டால் புலம்பிக்கொண்டே கேட்டாள். தணிகாசலமும் மிகுந்த கலக்கத்துடன் கண்ணீர் பெருகிய வண்ணமாகவே படித்தான். கடிதத்தைப் படித்து முடித்த பின்னர், இருவரும் அக்குழந்தையை மாறி மாறி எடுத்து அணைத்துக்கொண்டு முத்தமிட்டுக் காணாற்றுவெள்ளம்போலக் கண்ணீரைப் பெருக்கி இன்னது சொல்வதென்பதையும், இன்னது செய்வதென்பதையும் அறியாமல், பயித்தியங் கொண்டவர்களைப்போன்றிருந்தார்கள். பின் தணிகாசலம், "ஆ! என் கண்மணியே! என் செல்வமே! ஐயோ! என்னுருயிர்க்கமுதம்போன்ற காதலி! மரகதவல்லி! உன்னுயிரை மாய்த்துக்கொண்டு உனது எண்ணத்தைமட்டும் பூர்த்தி செய்துவிட்டுப் போயினையே! ஆ! மரகதமணியே! என்னுயிர் தக்ஷணமே நீங்கிவிடும்போல விருக்கிறதே! அவ்விதம் நீங்கினாலும் எனக்கு நற்கதி கிடைக்காதே; பரிசுத்தமான கற்புக்கரசியாகிய உன்னைச் சோதித்த இச்சண்டாளன் முகத்தில் விழிக்கலாகாதென எண்ணி என்னை நீ வெறுத்தாயோ! கற்பை நம்பாத அற்பபுத்தியுடையவன் என்றும், உள்ளன்பில்லாத கள்ளன் என்றும், அன்புள்ளவன்போல் வேஷம் போட்ட மோசக்காரனென்றும், அன்னிய ஆடவனிடம் காதலியை

அனுப்பிய கன்னெஞ்சன் என்றும், கருப்பிணியை வதைசெய்த சர்ப்ப விஷம்போன்றவனென்றும், அஞ்சா நெஞ்சைப் படைத்த பஞ்சமா பாதகனென்றும், உன்றன் ஆவியைப் போக்கிய பாவி என்றும் எண்ணி என்னை நிந்தித்தாயோ? நான் உன் கண்ணீர் நிலத்தில் வடிந்தோடச்செய்த பரம சண்டாளனுய்விட்டேனே! ஐயோ! என்ன செய்வேன்? அனியாயமாக உன்னைக் கொலை செய்த கூற்றுவனுய்விட்டேனே." என்று கதறிப் பதறிப் புலம்பினுன்; தலை மீதும், வயிற்றிலும் அறைந்துகொண்டு விழுந்து விழுந்து புரண்டழுதான்.

கிழவி இவனுடைய துயரத்தைக்காட்டிலும் பதின்மடங்கதிகமான துயரமுற்றுத் துடித்தாள். குழந்தை இதற்கிடையில் பசியின் கொடுமையால் மீண்டும் கத்தத்தொடங்கிவிட்டது. கிழவி கண்ணீர்பெருக்கியவாறு மெல்ல எழுந்து அக்குழந்தையைத் தணிகாசலத்தினிடத்தில் கொடுத்துவிட்டு, உள்ளே சென்று கொஞ்சம் தண்ணீரைக் காய்ச்சி அதில் சர்க்கரையைப் போட்டு வடிக்கட்டிக் கொண்டுவந்து அதனை மெல்லக் கரண்டியால் குழந்தைக்குப் புகட்டினுள். அவ்வாறு புகட்டியதும் அக்குழந்தையை நோக்கி, "அப்பா! என் கண்ணே! நீ உன் தாய்ப்பால் அருந்துவதைவிட்டு இத்தண்ணீரைக் குடிக்கும் தலைவிதி உனக்கேற்பட்டதே!" என்று சொல்லிவிட்டுத் தணிகாசலத்தை நோக்கி, "அடே தணிகாசலம்! நாம் இக்குழந்தையையும், கடிதத்தையும் பார்த்தவுடன் பிரமித்து ஒன்றுந் தோன்றும விருந்தபடியால் முக்கியமான விஷயத்தை மறந்துவிட்டோமே! இக்குழந்தையையும், இக்கடிதத்தையும் இங்குக்கொண்டுவந்து சேர்த்த மனிதர் யார் என்பதைத் தேடாது வாளாவிருந்துவிட்டோமே! இனி என்ன செய்வது?" என்று கூறினுள்.

இதைக் கேட்ட தணிகாசலம், ஆத்திரத்துடன் புலம்பியபடியே, "ஐயோ! பாட்டி! அவள் என்ன சாமானியமானவளா! மகா புத்திசாலியன்றே! அவளுடைய மேம்பாட்டை யறியாத மூடன் யான் அவளைப் பரிசோதித்ததற்குக் கடவுள் எனக்குச் சரியான தண்டனை கொடுப்பார்; அவள் இக்குழந்தையை யாரிட

மனுப்பினுளோ அவர்களை நாம் எவ்விதம் காணக்கூடும்? இவ்வளவு சாமார்த்தியமாக வேலை செய்துள்ள அவள், தான் அனுப்பிய மனிதரை நம்மிடம் அகப்படும்படி செய்வாளா? பாவி என்னைக் கண்ட துண்டம் செய்தாலும் நான் செய்த கொடுமை தீராதே.'' என்று கூறியவாறு கதறினன். இதற்குள் பொழுதும் புலர்ந்து விட்டது. குழந்தையோ தாய்ப் பாலுண்ணுமையால் சற்றும் வாய் மூடாது கதறுகின்றது. குழந்தையின் பரிதாபத்தைக் கண்டு அவர்களுடைய வருத்தம் முன்னிலு மதிகரித்துப் பொங்கிற்று. அத்துயரத்துடன் அவர்கள் அன்று அக் குழந்தைக்குப் பசுவின் பாலை வார்த்துவந்தார்கள். எனினும் குழந்தையின் அழுகை சற்றும் ஓயவேயில்லை.

அதைக் கண்ட கிழவி தணிகாசலத்தை நோக்கி, "அடே தணிகாசலம்! நீ எல்லாவிதத்திலும் அவளை உயிருடன் வதை செய்து விட்டாய்; அவள் கடைசியாகக் கேட்டுக்கொண்டபடியே இக் குழந்தையை யெடுத்துக்கொண்டுபோய் அவளுடைய தாய் தந்தையருக்குக் காட்டிவிட்டு, அவர்கள் என்ன சொல்கிறுர்களோ அதன்படி இனியேனும் நடந்துகொள்; இக்குழந்தை அழுவதைத் தடுக்கு முபாயம் நமக்குத் தெரியாது; அதனுல் நாம் வீணே இக்குழந்தையைக் கொன்றுவிடுவோம்; தாதி வைத்து இதற்குப் பால் கொடுக்கச் செய்யலாமென்றுலோ 'குழந்தையின் தாயார் எங்கே?' என்ற கேள்வியைப் பலர் கேட்பார்கள்; அதற்கு என்னவிதமான பதில் கூறுவது? அக் கேள்வியினுல் நமக்கு மீண்டும் பெரிய துன்பம் நேரும்; ஆகையினுல் அவர்களைக் கலந்துகொண்டு எதையும் செய்வது தான் உசிதம்; கிளம்பு; இன்றே போய்ச் சேரலாம்'' என்று கூறினுள். அவன் அதற்கிசைந்தான். பின் இருவரும் குழந்தையுடன் பிரயாணப் பட்டு ரெயில்வே ஸ்டேஷனுக்குப் போய் முதல் வகுப்பு வண்டியிலேறி அன்றிரவே கண்ணபிரானின் பங்களாவை யடைந்து உள்ளே சென்றுர்கள்.

குழந்தை அப்பொழுதும் கத்திக்கொண்டே யிருந்தது; உள்ளே சென்ற தணிகாசலமும், கிழவியும் அக்குழந்தையை அணைத்து

எடுத்துக்கொண்டு கோவெனக் கதறியவாறு கண்ணபிரான் படுத்திருந்த அறைக்குச் சென்றார்கள். அவ்வாறு சென்றதும் கிழவி அங்கு உட்கார்ந்திருந்த ருக்மிணியிடம் குழந்தையைக் கொடுத்து "ஐயோ! ருக்மிணியம்மா! உங்களுக்கு யான் என்னவிதமாக இப்போது நடந்திருக்கும் செய்தியைக் கூறு வேன்! நேற்றிரவு எங்கள் வீட்டு வாசல் திண்ணையில் இக் குழந்தை கிடந்தது; இது அங்கே யாரால் கொண்டுவந்து போடப் பட்டதோ அதை நாங்கள் முதலில் அறியோம்; இக் குழந்தை யழுதுகொண்டிருந்த சத்தங் கேட்டு நான் வெளியில் வந்து இதனருகில் சென்று இதைப் பார்த்தேன்; அப்போது நடுத் தெருவில் ஓர் பைராகி நின்றான். அவன் என்னிடம் வந்து, 'இக் குழந்தை உங்கள் மரகதவல்லியம்மாளுடையதே; அந்த அம்மாள் இக்குழந்தையைப் பிரசவித்துவிட்டு இறந்துபோனார்கள்; இறந்த பொழுது இக்குழந்தையை உங்களிடம் சேர்த்துவிடும்படி என்னை வேண்டிக்கொண்டார்கள்; அதன்படி யான் இதனைக் கொணர்ந்து இங்குச் சேர்த்துவிட்டேன்.' என்று கூறித் திடீரென்று மாயமாய் மறைந்துவிட்டான்.

உடனே நான் தணிகாசலத்தை எழுப்பி அவனிடம் இச்செய் தியை யுரைத்தேன்; அவன் விரைந்து வீதியில் சென்று அந்தப் பைராகியைப் பலவிடங்களில் தேடினன்; அவன் எவ்விடத்திலும் காணப்படவில்லை; இதென்ன மாயமோ தெரியவில்லை; குழந்தை யின் கீழே போட்டிருந்த துணி மரகதவல்லியின் புடவை யென்பது நிச்சயமாகத் தெரிந்தது; அப்புடவைத் துண்டின் ஓர் முனையில் சிறிய கடிதத் துண்டு ஒன்று கிடந்தது; அதில் மரகதத்தின் கையெழுத்தினல் 'உங்கள் குழந்தையை ஒருவர் உங்களிடம் சேர்த்துவிடுவார்; நீங்கள் என் பெற்றோரிடம் அதைக் காட்டுங்கள்; என்னுயுள் முடிந்தது'' என்ற வார்த்தைகளும், "மரகதம்" என்ற கையெழுத்தும் வரையப்பட்டிருந்தன; அதையும் நாங்கள் எடுத்து வந்தோம்; அது வழியில் தவறிவிட்டது; இப்போது அவளுடைய விருப்பப்படியே இக் குழந்தையை நாங்கள் கொண்டுவந்து உங்க ளுக்குக் காட்டிவிட்டோம்'' என்று தணிகாசலத்தினுடைய குற்றங்

கள் வெளிப்படாதிருக்கும்படி முன் அவர்களிடம் கூறியிருந்த பைராகி கதைக்கனுசரணையாகச் சில பொய்களையும் கலந்து கூறிக் கோவெனக் கதறி யழுதாள்.

இதற்குள் தணிகாசலம், கண்ணபிரானின் காலில் விழுந்து, "ஐயோ! மாமா! பாவியான் மீண்டும் தங்களுக்கெதிரில் வந்ததானது தங்கள் மனதிற்கு மிகுந்த அருவருப்பை யுண்டாக்கும்; எனினும் இப்போது நடந்த விஷயத்தைத் தங்களிடம் தெரிவிக்கவே நான் வந்தேன்; ஆதலால் என்மீது வெறுப்படையவேண்டாம்; கிழவி கூறிய விஷயமெல்லாம் உண்மையே; ஐயோ! நமது குலத்திற்கே யோர் பெரிய ஆபத்து வந்துவிட்டதே!" என்று கூறிப் புலம்பினன்.

எதிர்பாராததும், சொப்பனத்திலும் காணக்கூடாததுமான இவ்விஷயத்தைக் கேட்டதாலும், குழந்தையைக் கண்டதாலும் மிகுந்த ஆச்சரியத்தையும், அளவிலா விசனத்தையும் கணப் பொழுதில் அங்குள்ளோர் யாவரும் ஒருமித்தடைந்து தமக்குத் தோன்றியவாறெல்லாம் பிரலாபித்துப் புலம்பினர்கள். ருக்மிணியோ உயிரே நீங்கிவிட்டதுபோல மூர்ச்சித்து விழுந்து விட்டாள். கண்ணபிரானும் தனக்கு நேர்ந்திருந்த தேக அசௌக்கியத்தோடு இப் பேரிடி போன்ற விஷயத்தையும் கேட்டதால், 'அவனுக்கு உயிரிருக்கின்றதோ, இல்லையோ?' என்று பக்கத்திலிருப்பவர்கள் ஐயுறும்படி ஸ்மரணை யற்றுச் சவம் போலானன்.

ராஜேஸ்வரி குழந்தையை வாரி யெடுத் தணைத்து முத்தமிட்டு மிதமிஞ்சிய சோகத்தினல் அதிகமாகப் புலம்பினள். அவ்வாறு புலம்பிக்கொண்டே குழந்தையைக் கீழே விடாமல் அணைத்தபடியே தன் தாயாருக்கு மூர்ச்சை தெளியும்படியான சிகிச்சை செய்து விசிறினள். அவளோடு அவ்வமயம் அங்குக் கண்ணபிரானின் பக்கலில் கூடியிருந்த வைத்தியர்களில் சிலரும் ருக்மிணிக்குப் பலவிதமான சிகிச்சைகளைச் செய்தார்கள். அவற்றால் அவள் ஒருவாறு மூர்ச்சை தெளிந்தாள்.

அவர்கள் அவளுக்கு செய்தபடியே கண்ணபிரானுக்கும் எத்தனையோ விதமான சிகிச்சைகளைச் செய்தார்கள். அவ்வாறு

செய்தும் அவனுடைய மூர்ச்சை தெளிவடையவே யில்லை. அவனுக்கு அப்படியே உயிர் நீங்கிவிடுமோ என்ற கவலை எல்லோருக்கு முண்டாகிவிட்டது. ருக்மிணி ஏற்கெனவே மனவேதனையால் நோய்கொண்டு தளர்ந்து மெலிந்து பின்னர்க் கண்ணபிரானுக்கு நேர்ந்த தேக அசுகத்தைக் கண்டு முன்னிலும் அதிகமான துயரமடைந்து மிகவும் துர்ப்பலப்பட்டிருந்தாள். அத்தகைய நிலைமையில் இந்த விஷம்போன்ற நிகழ்ச்சியுண்டாகவே சுழல்காற்றிலகப்பட்ட பஞ்சைப் போல அவள் மனம் சுழன்றது; அவ்வகைச் சுழற்சியுடனே அவள் மாகதத்தைப் பெற்ற பாசத்தால் நெஞ்சங் கரைந்து கண் கலங்கி, "ஐயோ! என் செல்வக் குழந்தாய்! மாகதமணியே! என்னை இவ்விதமாகத் தவிக்க விட்டுச் சென்றாயே! ஆ! என் கண்ணே! நீயும் உன்னுடைய குழந்தையும் கூடி யிருப்பதைப் பார்க்கும் பாக்கியம் இப்பாழும் கண்களுக்கு ஏற்படாமல் போய்விட்டதே! ஐயோ! என் கண்ணே! நீ இந்த 5 மாதகாலமாக எவ்விடத்தில், எந்நிலையில், எத்தகைய வாதனையை அனுபவித்துக் கொண்டிருந்தாயோ! உன் வயிற்றுச் சுமையை இறக்கிவிட்டு இறைவனடியைச் சேர நினைத்திருந்தாயோ! அதன்படியே இப்போது சுமை நீங்கினதால் இறந்துவிட்டாயோ! என் தங்கமே! நீ இத்தகைய அவதிகளை அனுபவித்து, அற்பாயுள் பெற்று, அகால மரணத்திற்குள்ளாகி மனம் துடித்து வெதும்புவதற்காகவா உன்னை இச் சண்டாளி கொடும்பாவி ஈன்றேன்! ஐயோ! என் கிளியே! நான் உன்னை அரும்பாடுபட்டு வளர்த்துக் கடைசியில் இவ்விதமாகப் பறி கொடுத்துவிட்டுப் பரிதபிக்கும்படி பிரமன் விதித்தானே!" என்று புலம்பிக் குழந்தையை நோக்கி, "என் கண்ணே! என்னருயிர்ச் செல்வா! என் மரகதமணி பெற்ற மாணிக்கமணியே! என் செல்வக் கிளி பெற்ற செஞ்சுடர்ப் பொன்னே! என் கண்ணின் மணிபெற்ற வண்ணக் கொழுந்தே! என் இன்பவல்லி பெற்ற அன்பின் நிலையே! என் தங்கத்தின் வயிற்றிலுதித்த செங்கமலக் கண்ணு! என் பொற் கொடி பெற்ற அற்புதத்திருவே! தேனே! தெவிட்டாவமுதே! உன்னை உனது தாய், தன் காத்திலேந்தி நிற்க, நான் உனக்கும், உன் தாய்க்கும் திருஷ்டி தோஷங் கழித்து ஆலத்தி எடுத்து மகிழ்ந்து, உனக்கு

திருநாமம் சூடி, திருவிழாக்கொண்டாடி, மாதர்கள் கூடி மங்களம் பாடி, களியாட்டமாடி இன்பமுற்று உன்னை என்கரமலரேந்திக் கொஞ்சிக்குலாவும் படியான பாக்கியத்தைச் செய்யாத மாபாவியாகித் துடிக்கும்படியாக என்னை அந்த ராதாகிருஷ்ணன் வைத்துவிட்டானே! ஐயோ! என்கண்ணே! என்னுடைய பூர்வ ஜன்ம பாபத்தினால் யான் இவ்வித துன்பத்தைபடையச் செய்தாலும் அவனுடைய நாமாவை இடைவிடாது அனவரதமும் எல்லாவழியிலும் உச்சரித்துக் கொண்டே இப்பிறவியிலாவது நற்கதியடைந்து மறுமையில் துன்பமின்றி இருக்கும்படியான வழியையே அனுசரித்து வருகிறேன். அதேபோல உனக்கும் ராதாகிருஷ்ணன் என்ற என்குல தெய்வத்தின் நாமத்தையே சூடி யழைக்கின்றேன். என் செல்வக்கண்மணியே! உன்னைக் காணும்பொழுதே தாயற்ற பரதேசிப் பிள்ளையாகக் கண்டேனே! இப்படியா என்விதி மூண்டது? ஆ! என்னருமைக் குழந்தாய்! என் கண்ணான வத்ஸா!'' என்று வாயில் வந்தவிதமெல்லாம் பிரலாபித்துக்கொண்டே குழந்தையைக் கத்தவிடாது அணைத்து உச்சி மோந்து முத்தமிட்டுத் தன்னுடைய ஸ்தன்ய பானத்தை அதற்கூட்டி அதன் அழு குரலைச் சற்றுத் தெளியச் செய்தாள்.

இதற்குள் அன்று செல்ல மறு நாள் பொழுது புலர்ந்தது. அதன்மேல் ருக்மிணி ஓர் தக்க பால்கார தாதியை நியமித்துக் குழந்தைக்குப் பாலூட்டுவித்தாள். கண்ணபிரானுக்கு அன்றும் மூர்ச்சை தெளிந்து பிரக்ஞை உண்டாகவில்லை. ருக்மிணி, தணிகாசலத்தையும், கிழவியையும் அவ்விடத்திலேயே இருக்கும்படி கூறினாள். அதன்படி அவர்கள் அங்கிருக்கச் சம்மதித்தார்கள். பின்னர்ப் பிரபலமான வைத்தியர்களில் பலரும் வந்து கண்ணபிரானுக்குப் பலவிதமான அவுடதங்களையளித்து 3-வது நாள் பிரக்ஞையை உண்டாக்கினார்கள். அவ்வாறு பிரக்ஞை பெற்ற கண்ணபிரான் குழந்தையை அருகில் வருவித்து அதைப் பார்த்துப் புலம்பிக் கண்ணீர் உதிர்த்தான். அவனுக்குக் கையும், வாயும் சுவாதீனமற்றிருந்ததால் குழந்தையை வாங்கவோ, வாயினால் கொஞ்சவோ, அவன் அசக்தனாகிவிட்டான். அவர்கள் மரகதவல்லியைக் காண

மல் குழந்தையைமட்டும் கண்ட செய்தி முக்கியமான எல்லோருக்கும் தெரிந்துவிட்டது. இவ்விஷயத்தைப்பற்றி ராஜேஸ்வரி இரகசியமாகத் தாமோதரனுக்குக் கடிதம் எழுதியதுடன், "தாங்கள் எக்காரணம் பற்றியும் இவ்விடத்திற்கு வரவேண்டாம்" என்றும் தெரிவித்துவிட்டாள்.

பின்னர்ச் சில தினங்கள் சென்றன. ருக்மிணி, அக்குழந்தையைத் தாய் வளர்த்ததைப் பார்க்கிலும் பன்மடங் கதிகரித்த வாஞ்சையுடன் வளர்த்ததால் அது வருத்தம் நீங்கி விளையாட்டுடன் வளர்ந்துவந்தது. குழந்தை அவ்வாறு அங்குவந்து சேர்ந்தபின்னரும்கூட கண்ணபிரானுக்குத் தாமோதரன்மீதேற்பட்ட துர் எண்ணம் சிறிதும் நீங்கவில்லை. அவன் மேலும், "அந்தத்திருட்டுப் பயலே இவ்விதம் தாயையும் சேயையும் பிரியவைத்து, அவள் இறந்துவிட்டதாகக் கட்டுக்கதைக் கூறி எனக்கு விசனத்தையும் மரணத்தையு முண்டாக்கும் பொருட்டுச் செய்துள்ள சூழ்ச்சியே இது" என்ற ஒரு புதிய தீர்மானத்தையும் மனத்தில் உறுதியாகக் கொண்டதுடன் அந்த அபிப்பிராயத்தை ருக்மிணி, ராஜம் முதலியோரிடமும் தெரிவித்தான். அவர்கள் அதைப்பற்றி எவ்வளவோ மறுப்புக் கூறினார்கள். அவ்வாறு கூறியும் அவன் கேட்கவில்லை. அவனுடைய பிடிவாதத்தைக் கண்ட அவர்கள், "இவர் என்ன அபிப்பிராயஞ் சொன்னாலும் சொல்லட்டும்; இவர் மனம் போல் இப்போது நாம் எதையும் விட்டுவிடவேண்டும்; இவர் நோயினால் தளர்ந்திருக்கும் இந்நிலையில் நாம் இவருடைய நோக்கங்களைத் தடுத்தால் இவருக்கு மனவேதனை அதிகரிக்கும்; ஆத்திரமுண்டாகும்; அதனால் தேக சுகத்திற்கு இன்னும் பங்கம் நேரும்." என்று யோசித்து அதன்மேல் ஒன்றும் சொல்லாமல் வாளாவிருந்துவிட்டார்கள். அவனுடைய தேகத்தைக் கவனிப்பதிலேயே கண்ணையும் கருத்தையும் செலுத்தி வந்தார்கள். சிலர் கண்ணபிரானுக் கேற்பட்டிருக்கும் வியாதிக்குக் காரணம் சூனியமென்றும், சிலர் ஏவலென்றும், சிலர் வாதமென்றும் பல வகையாகக் கூறி வந்ததால் எல்லாவற்றிற்கும் மந்திரம், தந்திரம், மருத்துவம் முதலியவற்றைச் செய்யத் தொடங்கினார்கள்,

மந்திரவாதிகளில் முன்னால் வந்திருந்த மித்திரபேதக்காரனும் ஏதோ மந்திரங்கள் செய்வதாக நடித்துக்கொண்டிருந்தான். இன்னும் எண்ணிலாத ஜோஸியரும், மந்திரவாதிகளும் வீட்டில் சதா நிறைந்து கூடியிருந்தார்கள். அவர்களில் ஓர் ஜோஸியன் கண்ணபிரானின் ஜாதகங்களைப் பார்த்து, கிரகத்திற்குச் சாந்தி செய்ய வேண்டுமென்று அது சம்பந்தமான விஷயங்களை எடுத்துக் கூறி அதைச் செய்துவந்தான். அவனிடத்தில் மட்டும் கண்ணபிரானுக்கு அதிக நம்பிக்கையுண்டு; முந்திய மந்திரவாதி யிடத்தில் அவன் எத்தகைய நம்பிக்கை வைத்திருந்தானோ அத்தகைய நம்பிக்கையை இவனிடமும் வைத்து இவனைச் சதா தன் பக்கலிலேயே இருத்திக்கொள்வதும், இவன் சொல்லியபடியே கேட்பதுமாக விருந்தான். முந்திய மந்திரவாதியும் இந்த ஜோஸியனும் அவனுக்கு அத்யந்த நேசர்களாக விருந்தார்கள். கண்ணபிரான் இத்தகைய தேக நிலைமையிலும் இவ்விருவரிடத்திலும் அவ்வாறு நம்பிக்கையாக விருப்பது ராஜத்திற்கும், ருக்மிணிக்கும் சிறிதும் சம்மதமே இல்லை. எனினும் தாங்கள் அதைத் தடுத்தால் அவன் கேட்கமாட்டான் என்பதை உணர்ந்தவர்களாகையால் அதிகமாக இவ்விஷயத்தில் தடை வார்த்தைகள் கூறாமல் பொறுமையாக விருந்தார்கள்.

இவ்விதமே 2-மாத காலம் சென்றது. அதுவரையில் பல வகைகளிலும் அளவில்லாத பணத்தைச் செலவிட்டுக் கண்ணபிரானுக்கு அவர்கள் சிகிச்சை செய்துவந்தும் சிறிதும் குணம் ஏற்படவில்லை. இதைப்பற்றி எல்லோருக்கும் மிகுந்த கவலை அதிகரித்து விட்டது. பெரிய வைத்தியர்களெல்லாம் கண்ணபிரானுக்குச் சௌக்கியமாகாதென்று அவனுக்குச் சிகிச்சை செய்வதைக் கைவிட்டுவிட்டார்கள். 'அவருக்கு இஷ்டமானவைகளை யெல்லாம் கொடுத்து அவருடைய ஆவலைப் பூர்த்தி செய்துவிடுங்கள்; இனி அவர் பிழைக்கமாட்டார்' என்று கூறிவிட்டார்கள். மாந்திரீகர்கள் மட்டும், "இன்னும் ஜபம் செய்யவேண்டும்" என்று பணச் செலவிற்கு வழிவைத்துக்கொண்டே யிருந்தார்கள். ஜோஸியர்களும், "தானம் செய்யவேண்டும்; தருமம் செய்யவேண்டும்." என்றார்கள்.

அவர்களில் கண்ணபிரானின் முக்கிய ஜோஸியனும், மாந்திரீகனும் வெகு நேரம் யோசித்து ஜபஞ் செய்பவர் போல நடித்துக் கண்ணபிரானை நோக்கி, "ஐயா! தங்களுக்குச் சங்கடத்தை உண்டாக்கியிருக்கும் கிரகத்திற்கு முதலில் சாந்தி செய்துவிட்டு, ஓர் கன்னிகாதானம் இன்னும் 4 நாளைக்குள் செய்தால் உங்களுடைய தேகம் சௌக்கிய மடைந்துவிடு மென்று தேவதை கூறுகின்றது; அது ஒருபோதும் பொய்யாகாது; ஆகையால் இவற்றையும் செய்து பார்த்துவிடவேண்டும்; பின்னர் ஈசன் விட்டவழியாகட்டும்" என்று மெல்லக் கூறினார்கள்.

இதைக் கேட்ட கண்ணபிரான் சிறிது மலர்ந்த முகத்துடன் பேசத்தொடங்கி, "அன்பர்களே! நீங்கள் தெரிவித்த விஷயத்தினால் எனக்குப் பலன் கிடைக்கும் என்பதை நான் அறியாமலே நீங்கள் கூறிய கன்னிகாதான விஷயத்தைப்பற்றி இயற்கையாகவே மூன்று நாட்களாக யோசித்துக்கொண்டு வருகிறேன்; அதாவது, எனது இளைய குமாரத்திக்கு என்னுயிர் இருக்கும்போதே விவாகத்தைச் செய்து காண வேண்டுமென்ற அவா எனக்கு உதித்தது. அவள் எனது ஜன்மவிரோதியை மணக்க இச்சித்திருப்பதால் என்னுயிர் நீங்கியபின்னர் அவனையே மணந்துவிடுவாள்; ஆதலால் என்னுடைய உயிர் இருக்கும் போதே அவளுக்கு வேறு கணவனைத் தேடி மணத்தை முடித்துவிட்டால்தான் என் ஆத்மா சாந்தியடையும்; அதை யுத்தேசித்தே நான் அவ்வெண்ணம் எண்ணினேன்; அதை இன்னும் என் சமுசாரத்தினிடத்தில் தெரிவிக்கவில்லை; என்னுடைய கருத்துக் கிசைந்தாற் போல தேவதையும் கூறிவிட்டதனால் நான் இதைச் சீக்கிரத்தில் முடித்துவிடுகிறேன்; எனது சிநேகிதரிடத்தில் இதனைக் கூறி என் மகளுக்குத் தகுந்த மாப்பிள்ளையைப் பார்க்கும்படி செய்கிறேன்; நீங்கள் உடனே சென்று என் சிநேகிதராகிய கோவிந்த ரெட்டியாரை அழைத்துவாருங்கள்" என்று கட்டளை யிட்டான். இதைக் கேட்ட ஜோஸியனும், மந்திரவாதியும் தாமோதரன்மீது ஆத்திரங்கொண்டு கண்ணபிரானை நோக்கி, " ஆகா! உங்கள் குழந்தைக்கு இத்தகைய துரோகத்தைச் செய்த அந்த பரம பாதகனாகிய தாமோதரனுக்கா உங்களுடைய

பெண்ணைக் கொடுப்பது! அதைவிட அக் குழந்தையைக் கொன்று விடலாம்'' என்றார்கள்.

அவ்வாறு சொல்லி அவனுக்குச் சூட்டைக் கிளப்பிவிட்டபின் ஜோஸியன் தனியே பேசத்தொடங்கி, "எஜமானே! நான் இங்கு நடந்த சகல வரலாற்றையும் இந்த மாந்திரீகரின் மூலமாகத் தெரிந்துகொண்டேன்; அதன்பேரில் அந்த மனிதனைப் பற்றிய இரகசியங்களை யறியச் சக்கரமிட்டு அவற்றில் கிரகங்களை அடைத்துக் கணக்கிட்டு ஆரூடம் பார்த்தேன். அவ்விதம் எதற்காகப் பார்த்தேனெனில், நமது பெரிய குழந்தை விஷயத்தில் அவன் செய்த படுமோசத்தையும், பின்னர் அந்த அம்மாளைப் பிரித்துக் குழந்தையை மட்டும் இங்கு கொணர்ந்து விட்டுவிட்டதையும், தாங்கள் ஆத்திரத்துடன் அவனைப் பிடிக்கச் சென்றும் தேக அசுகத்தினால் தடை ஏற்பட்டுவிட்டதையும் நான் உணர்ந்ததனால், அவனை இந்தமட்டில் இலகுவில் விட்டுவிடக் கூடாதென்றும், நானே அவனுடைய இரகசியங்களை உள்ளபடி ஆரூடத்தினால் உணர்ந்து அவனைப் பிடித்துக் கொடுக்க வேண்டுமென்னும் எண்ணம் எனக்குண்டாயிற்று; அதனாலேயே அவ்வாறு ஆரூடம் பார்த்தேன்; அப்படி ஆரூடம் பார்த்ததில், அவன் ரங்கோனில் வேலையாயிருந்த கம்பெனியில் 5000 ரூபாய் திருடிக்கொண்டு எங்கேயோ ஓடிவிட்டா னென்பதும், போலீஸார் அவனைத் தேடியலைகிறார்களென்பதும் தெரிந்தன; அவன் அவ்விடத்தில், 'தாமோதரன்' என்ற பெயரை மாற்றித் தனகோடி என்ற பெயர் வைத்துக்கொண்டிருக்கிறான் என்பதும் தெரிந்தது; உடனே நான் அவ்வாபீஸுக்கு ஓர் தந்தி யடித்து அங்குள்ளவர்களிடம், 'இவ் விஷயங்கள் நடந்தது உண்மைதானா?' என்று விசாரித்தேன்; அவர்கள், 'நீர் ஆரூடத்தில் கண்டவை உண்மைதான்' என்று எனக்கு அங்கிருந்து பதில் தந்தி கொடுத்தார்கள்; அவர்கள் அவனை எவ்விதத்திலாவது பிடித்துவிடுவார்கள்; அவ்வாறு பிடிக்கும் சமயத்தில் நாம், இக் குடும்பத்திற்கு அவன் செய்திருக்கும் குற்றங்களையும் காட்டி அவனைத் தண்டித்துவிடலாம் என்று நான் தீர்மானித்திருக்கிறேன்; இவ்விஷயத்தில் தங்களுடைய அபிப்பிராய மென்ன?'' என்று கேட்டான்.

இதைக் கேட்ட கண்ணபிரான், மிகுந்த வியப்பை யடைந்து, "ஆ! அவன் திருடிவிட்டு ஓடியும் போய்விட்டானு! இருக்கட்டும், நானும் அவனுக்குத் தக்க வேலை செய்கிறேன்; அதைப்பற்றி நாம் பின்னல் யோசிப்போம்; நீர் சென்று கோவிந்த ரெட்டியாரை அழைத்துவாரும்" என்ருன்.

உடனே அந்த ஜோஸியன் விரைவில் சென்று கோவிந்த ரெட்டியாரை அழைத்துவந்தான். அவரைக் கண்ட கண்ண பிரான், தன்னருகில் உட்காரவைத்துக்கொண்டு தான் தெரிவிக்க வேண்டிய விஷயத்தைத் தெரிவித்துத் தன் இளைய புத்திரிக்கு ஓர் மாப்பிள்ளையைத் தேடித் தனக்குப் பதிலாக எல்லா வேலையையும் அவரே செய்யும்படி அவரைக் கேட்டுக்கொண்டான்.

இதைக் கேட்ட கோவிந்த ரெட்டியார், "என்ன கண்ணபிரான்! 'மனம்போல ஆயிற்று மங்கல்யம்' என்றபடி நீ நினைத்தபடியே காரியம் நடந்துவிட்டதே! உனது தங்கை பிள்ளையான தாமோதரன் பெருத்த திருட்டுப் பயலாக மாறிவிட்டானுமே! எல்லாச் செய்திகளையும் இந்த ஜோஸியர் மூலம் நான் அறிந்தேன்; எல்லாம் கடவுளின் செயல்; நம்மாலாவது என்னவிருக்கிறது? நான் முன்னமோர் சமயத்தில் உன்னிடம் தெரிவித்த விஷயம் நினைவிருக்கிறதா? அதாவது என் சகோதரியின் மகன் தஞ்சாவூரில் வேலையாக விருக்கிருன் என்றும், அவனுக்கு நிறைந்த சொத்துக்கள் இருக்கின்றனவென்றும், மரகதவல்லியை அவனுக்கே கொடுத்துவிடு என்றும் தெரிவித்தேனல்லவா? அப்பிள்ளைக்கு இன்னும் விவாகமாகவில்லை; சகல விதத்திலும் மேன்மைக் குணமும் சிங்கார வெழிலு முள்ள பெண்ணை யன்றி வேறு பெண்ணை மணப்பதில்லை யென்று அவன் வைராக்கியம் செய்து கொண்டிருக்கிருன்; பையன் வெகு கெட்டிக்காரன்; ஒரு தந்தி யடித்து நாளையே நான் அவனை இங்கே வரவழைத்துவிடுகிறேன்; நாம் விவாகத்தை முடித்துவிடுவோம்; அவன் ஜாதகம் வேண்டுமானுல் என்னிடமே இருக்கிறது; அதை இப்போழுதே பார்த்துவிடுவோம்; என்ன சொல்கிருய்?" என்ருர்.

இதைக் கேட்ட கண்ணபிரான் அதற்குச் சம்மதித்து, "சரீ; உன்னிஷ்டப்படியே காரியத்தை நடத்திவிடு" என்று முடிவாகக் கூறிவிட்டான். உடனே கோவிந்த ரெட்டியார், ஓர் ஜாதகத்தை ஜோஸியனிடம் கொடுத்து, ராஜேஸ்வரியின் ஜாதகத்தையும் ருக்மிணியிடம் கேட்டு வாங்கி யளித்து இரண்டையும் பார்க்கச் செய்தார். ஜோஸியன் ஜாதகங்களைப் பார்த்து, 'இரண்டும் பொருத்தமாயிருக்கின்றன' என்று கூறிவிட்டான். இங்கு நடந்த சகல விஷயங்களையும் மறைவிலிருந்தபடியே கவனித்துக் கொண்டிருந்த ராஜத்தின் மனம் துடிக்கின்றது. அவள் என்ன செய்வாள் பாவம்! "ஐயோ! அத்தான்கூட 5000 ரூபாய் களவாடி யிருப்பாரா! இது சுத்த கட்டுக் கதையான செய்தி; நாம் உண்மையில் இதை விசாரித்தறியவேண்டும்" என்று எண்ணியவளாய் இதைத் தன் தாயிடமும் தெரிவித்து அவளனுமதி பெற்று முன்னர்த் தாமோதரனுக்குக் கடிதமெழுதிய விலாசத்திற்கு ஓர் தந்தி கொடுத்தாள். அத் தந்தியில் எழுதப்பட்ட சமாசாரங்களாவன:—

"அத்தான்! சில மாதகாலமாகத் தமது வாலாறுகளில் ஒன்றுமே தெரியவில்லை; ஆகையால் உடனே பதில் தந்தியில் தமது க்ஷேமத்தை தெரிவிக்கவும்; ராஜம்." என்பனவே. மறுதினம் அத் தந்தி இராஜத்தினிடமே திரும்பி வந்துவிட்டது; அதைக்கண்டு ராஜம் திடுக்கிட்டாள். "ஐயோ! அத்தான் அவ்விடத்திலில்லாமையாலல்லவோ தந்தியும் திரும்பிவிட்டது; இனி அவர் தகவலை எவ்வித மறியக்கூடும்? அவர் ஆபீஸின் விலாசமும் எனக்குத் தெரியாதே நான் என்ன செய்வேன்?" என்று கலங்கித் தவித்தாள். பின் தன் தாயிடம் தெரிவித்துத் தன் விவாகத்தைத் தடுக்கும்படி கேட்டுக்கொண்டு மன்றாடினாள்.

ருக்மிணி இவ்விஷயத்தைப் பற்றிக் கண்ணபிரானிடத்தில் எத்தனையோ விதமான வார்த்தைகளைச் சொல்லி இப்போது ராஜத்திற்குக் கலியாணம் வேண்டியதில்லை யென்று அவனைத் தடுத்தாள். அவன் அதைக் கேட்கவில்லை.

அவ்வமயம் இராஜேஸ்வரிக்கோர் கடிதம் வந்தது. அதைக் கண்ட இராஜத்திற்கு அளவிலடங்கா ஆச்சரியமுண்டாகிவிட்டது.

அதன் உறைமீதிருந்த எழுத்துக்கள் தாமோதரனுடையன என்பது அவளுக்குத் தெளிவுற விளங்கிவிட்டது. உடனே அவள் மறைவான விடத்திற்குச் சென்று அக்கடிதத்தைப் பிரித்துப் படிக்கலாயினள். அதிற் கண்ட விஷயங்களாவன :—

"சௌபாக்கியவதி ராஜத்திற்கு,—உன்னை இனிக் காதலி என்று அழைக்க நான் அருகனல்லாதவனாய்விட்டேன்; நம்மை என்று மாமன் பிரித்து வைத்தாரோ அன்றே நாம் பிரிந்துவிட்டோம்; நான் முன்னர் உன்னை விட்டுப் பிரியும்போது, 'எனக்கு ஏதேனும் ஆபத்து நேர்ந்தால் அதிலிருந்து என்னைக் காக்கவேண்டும்' என்று உன்னை நான் கேட்டுக்கொண்டது உனக்கு நினைவிருக்கலாம்; நான் எனது கெட்ட காலக்கொடுமையினால் மிக்க தீயவனாகி விட்டேன்; நான் இவ்விடத்திலோர் ஆங்கிலமாதைக் காதலித்து அவளை மணம் செய்துகொள்ள விரும்பினேன்; நான் காதலித்த கன்னிகை கைநிறைந்த பணத்தையே நாடினள்; ஆதலால், 5000 ரூபாயை, நான் வேலையிருந்த ஆபீஸில் திருடிக்கொண்டு அவ்வூரை விட்டு ஓடிவிட்டேன்; எனது இருப்பிடத்தை உனக்குத் தெரிவிக்க வேண்டுவது அனாவசியம்; நீ உனக்கு உனது பிதா தேடித்தீர்மானிக்கும் வரனைத் தட்டாது விவாகம் செய்துகொள்; நீ உண்மையாய் என்னை நேசித்ததற்கு அடையாளமாக நீ எனக்குச் செய்யத்தக்க உதவி யாதெனில், இவ்விவரத்தையாவது, இக்கடிதத்தில் உள்ள வேறு எந்த விஷயத்தையாவது பிறரிடம் தெரிவிக்காது உடனே இக்கடிதத்தைக் கிழித்தெறிந்துவிடவேண்டும்; இந்த உதவிதான் நான் உன்னைக் கேட்பது; இக்கடிதத்தை உனக்கு நான் எதற்காக எழுதுகிறேனெனில், நீ என்னை நம்பி, பிதாவைப் பழித்துக்கொண்டு வேறுவரனை மணஞ்செய்துகொள்ள இசையாமலிருப்பதை விடுத்து, உன் தந்தை குறிப்பிடும் மாப்பிள்ளையை மணஞ் செய்துகொள்ள வேண்டுமென்பதைக்குறித்தே இதை எழுதுகிறேன்; நான் கூடிய சீக்கிரத்தில் அக்கரைச் சீமைக்குச் சென்றுவிடுவேன்; நாம் ஒருவரையொருவர் இனி நினைக்கக்கூடாது; ஒருவர் மற்றொருவரை இறந்துவிட்டதாகவே நினைத்துக்கொள்ளவேண்டும்; நீ வேறொருவனை மணம் செய்துகொண்டு மகிழ்வாயிரு; நான் காதலித்த

கன்னியின் புகைப்படத்தை இத்துடன் வைத்திருக்கிறேன்; இதைப் பார்த்துக்கொள்; உனக்குமெனக்கும் உள்ள பற்றுதல் நீங்கி விட்டது; உன் அக்காள் விஷயமாக நீ எழுதிய கடிதத்தை நான் பார்த்தேன்; அவரவர் தலைவிதிப்படி எதுவும் நடக்கும்; இக்கடிதத்தை வெளியிடாதே என்பதை மீண்டும் உனக்கு ஞாபகப்படுத்துகிறேன்.

இப்படிக்கு,

தாமோதரன்''.

என்பவைகளே. அவள் இவற்றைப் படித்துப்பார்த்தவுடன், அந்தோ! பல பேரிடிகள் தன் சிரசில் விழுந்துவிட்டதுபோல துடிதுடித்து மூர்ச்சித்துவிட்டாள்.

பின்னர்ச் சற்று நேரத்தில் தெளிந்து எழுந்து அந்தக் கடிதத்திற்குள்ளிருந்த படத்தை எடுத்துப் பார்த்தாள். அதில் ஓர் அழகிய ஆங்கிலமாதின் உருவம் காணப்பட்டது. அவள் அதைக் கண்டதும் "ஆகா! என் அன்பரின் மனத்தை இன்புறச்செய்யும் சுந்தர வதனியா இவள்! எவ்விதத்திலேனும், யாராலேனும் என்னுருயிர் அத்தான் சுக ஜீவியாயும், ஆநந்த சித்தராயும் இன்பத்துடன் இருப்பதே எனக்கு மிகுந்த மகிழ்ச்சியாகும்; என் அன்பான அத்தான்! நான் இக்கடிதத்தையாவது இப்படத்தையாவது கண்டு சிறிதும் பொறுமை கொள்ளவில்லை; தங்களை மகிழ்விக்க வந்த இம்மங்கை நல்லாளையும், தம்மையும் கடவுள் கருணையுடன் காப்பாராக''. என்று வெகு மேன்மையான குணத்தினளாய்ச் சிறிதும் பொறுமையின்றித் தனக்குள் கூறியபடியே கடிதத்தைக் கிழித்தெறிந்துவிட்டு அப்படத்தைமட்டும் ஒரு பெட்டியில் மறைவாக வைத்துவிட்டாள்.

அதே தருணம், இராஜத்தை அவள் தந்தை யழைப்பதாக ஒரு வேலைக்காரன் வந்து அவளிடம் தெரிவித்தான். உடனே இராஜம் தனது வருத்தத்தை யொருபுறம் அடக்கிக்கொண்டு தந்தையிருப்பிடத்திற்கு எழுந்து சென்று, அவரைநோக்கி, வெகு வணக்கத்துடன், "என்னருமைத் தந்தையே! எதற்காக என்னை நீங்கள் அழைத்தீர்கள்?'' என்று கேட்டாள்.

கண்ணபிரான் இராஜத்தைத் தன்னருகில் அழைத்து வைத்

துக்கொண்டு வெகு பக்ஷத்துடன் பேசத்தொடங்கி, "என் கண்ணே! இராஜம்! நான் ஓர் விஷயத்தை யுன்னிடம் கேட்கப்போகிறேன்; அதற்கு நீ சரியான விடையளித்து என்னை மகிழ்விக்க வேண்டும்; அதாவது,—நான் இரு கண்களைப்போல இரு பெண்களைப் பெற்றேன்; ஒரு கண்ணுகிய மரகதமணி என்னைத் தனித்துத் தவிக்க விட்டுச் சென்றுவிட்டாள்; மற்றொரு கண்ணுகிய நீயே தற்போது என்னுடைய உயிர் வெளிக் கிளம்பாதிருக்கும்படி செய்யக்கூடிய நிலைமையிலிருக்கிறாய்; நீ இன்னமும் அந்தத் துஷ்டப்பயலையே நம்பியிருக்கிறாயா, அல்லது இப்போது அந்த எண்ணம் உனக்கு மாறியிருக்கிறதா? யான் ஓர் தக்க வரனைத்தேடி அவனுக்கு உன்னைக் கன்னிகாதானம் செய்துகொடுக்க நிச்சயித்துள்ளேன்; இந்த எண்ணம் நிறைவேறினால்தான் என்னுயிர் தரிக்கும்; நீ என் வயிற்றில் பிறந்தது உண்மையாயிருந்தால் என்னுடைய உயிர் நிலைக்கும் பொருட்டு இந்த என்னிஷ்டத்தைப் பூர்த்தி செய்யவேண்டும்; இதோ இந்தப் பத்திரிகையைப் பார்" என்று கூறி அங்கு அருகிலிருந்த ஓர் பத்திரிகையையெடுக்கச் செய்து அதில் ஓரிடத்தைக் காண்பித்தான்.

அதை வாங்கிய இராஜம் மிகுந்த ஆவலுடன் தன் தந்தை காட்டிய இடத்தைப் படிக்கலானாள். அதில் கண்ட விஷயம் பின் வருமாறு:—

" களவு ! 5000 ரூபாய் களவு !!

"எங்கள் ஆபீஸில் வேலைக்காகச் சென்னையிலிருந்து வந்த தனகோடி என்பவன் எங்கள் ஆபீஸிலிருந்து 5000 ரூபாய் களவாடிக் கொண்டு ஓடிவிட்டான்; போலீஸார் அவனைத் தேடிக்கொண்டிருக்கிறார்கள்; அத்திருடனைக் கண்டுபிடித்து எங்களுக்குக் காட்டுவோர்க்கு 500 ரூபாய் இனுமளிக்கப்படும்; அவன் மீது இன்னும் சில புகார்களும் கிளம்பியிருக்கின்றனவாம். இங்ஙனம் மானேஜர் ஸ்கை கம்பெனி, ரெங்கோன்."

இதைப்படித்ததும், அந்தோ! அவள் அடைந்த கவலைக்களவில்லை. அவளுக்குச் சற்று நேரத்திற்குமுன் வந்த கடிதத்தில்

கண்ட செய்தியை இப்பத்திரிகை மெய்ப்பித்துவிட்டதால், அவள் எண்ணாதது மெண்ணினாள். செய்வதொன்றும் தோன்றாமல் அப்பத்திரிகையைக் கீழே வைத்துவிட்டாள். அவளையறியாமல் அவள் கண்களில் கண்ணீர் வடியத் தொடங்கிற்று. அப்போது அவள் தனக்குள்ளாகவே பலவித சிந்தனைகளிலாழ்ந்து விட்டாள்.

அவளுடைய நிலைமையை நன்கறிந்த கண்ணபிரான், அவளை நோக்கி, "என்னவிது, இராஜம்! நீ ஏன் கண்கலங்குகின்றாய்? அவனுடைய அயோக்கியத்தனத்தை யான் வெகு நாட்களாக அறிந்திருந்ததனாலேயே அவனை வெறுத்தேன்; முதலில் அவனிடம் எனக்குத் துவேஷம் பிறந்ததற்குக் காரணத்தைக் கூறுகிறேன் கேள்;—ஒரு சமயம் என் தலையே போய்விடக்கூடிய காரியத்தை அவன் செய்தான்; அதுமுதல் அவனை நான் விலக்கியதுடன் உன்னையும் அவனுக்குக் கொடுக்க நினைத்திருந்ததை விடுத்தேன்; அவனுடைய துஷ்கிருத்தியங்கள் இப்போது உனக்கு நன்கு விளங்கிவிட்டன; ஆதலால், இனி நீ அவனைக் கனவிலும் எண்ணாதே; அவன் ஓர் தாசியின் மகனென்றும் எனக்குக் கேள்வி; அதையும் இந்த ஜோஸியர் கண்டுபிடித்துவிடுவதாகக் கூறியுள்ளார்; ஆகையினால் நீ இனி அவனுடைய எண்ணத்தை அறவே ஒழித்துவிட்டு நான் குறிப்பிடுமிடத்தை நாடு; இராஜம்! நம் கோவிந்த ரெட்டியாரின் உறவினன் ஒருவன் இருக்கிறானும்; அவனுக்குச் சகல விதத்திலும் ஒருகுறைவுமில்லையாம்; அவனுக்கே நான் உன்னைக் கொடுக்கத் தீர்மானித்திருக்கிறேன்; நீ இனிமேல் தடையின்றி என்னுயிரையும், உன் தாயின் மங்கல்யத்தையும் காக்கும்பொருட்டு என் விருப்பப்படி இந்தச் சம்பந்தத்தை ஏற்றுக் கொள்வாயென்று நான் நினைக்கிறேன்; என்ன வாளாவிருக்கிறாய்? பதில் கூறு" என்று மிக்க அன்போடு கேட்டான்.

இதைக் கேட்ட இராஜத்திற்கு ஒன்றுமே தோன்றவில்லை. அவளுடைய உயிர் நிலையாகிய அத்தானின் செய்தி, அவளுக்கு நேரில் கடிதம் வந்ததிலிருந்து நன்றாக விளங்கிவிட்டது. கடிதமோ அவன் கையெழுத்தென்பதில் சிறிதும் ஐயமின்று; கடிதத்தில்

கண்ட விஷயம் பத்திரிகையிலும் வந்துவிட்டது. அதன்மேல் அவள் "இவ்விஷயத்தைப் பற்றிச் சந்தேகமே கொள்ள இடமில்லாமல் உமது செய்கை உண்மையென்றே நிச்சயமாக நம்பும்படியாய் விட்டதே! ஐயோ அத்தான்! இவ்விதமாகவா உமது மனம் மாறிவிட்டது!" என்று எண்ணிக் கலங்கினாள்; பழயகாலத்து விஷயங்களெல்லாம் அவள் மனத்திற் கிளம்பி அவளை மிகுந்த வேதனைக் குள்ளாக்கின. மற்றொரு பக்கத்தில் அவளுடைய தந்தை அவளிடத்தில், "நீ என் நோக்கப்படி நடந்தால் மாத்திரமே என் உயிர் நிலைக்கும்" என்று சொல்லிக்கொண்டிருப்பதை நினைத்து அவள் நெஞ்சங்கரைந்தோடுகின்றது. இத்தகைய கலக்கங்களால் அவள், "ஐயோ! நாம் ஒருவிதமான முடிவையும் செய்துகொள்ளக் கூடாத நிலைமையை இப்போது அடைந்திருக்கின்றோமே! இந்நிலையில் நான் தந்தையின் உயிரைக் காப்பாற்றும் பொருட்டு அவர் கருத்திற்கு இப்போதே இணங்குவதா? அல்லது அத்தானுடைய விஷயத்தை இன்னும் ஐயமறத் தெரிந்துகொண்டு பின்னர் இதைச் செய்வதா? எனக்கு ஒன்றும் தோன்றவில்லையே! ஐயோ! அத்தானுடைய கையால் எழுதப்பட்ட கடிதமே வந்திருக்கும்போது இனித் தெரிந்துகொள்ள வேண்டிய விஷயம் என்ன விருக்கிறது?........ஐயோ! நான் என்ன செய்வேன்? அவரும் உறுதியாக, "நீ உன் தந்தையால் தேடப்படும் புருஷனை தடையின்றி மணந்துகொள்" என்று வரைந்துவிட்டாரே! இந்தத் தரும சங்கடத்திற்கு யான் என்ன செய்வேன்!" என்று வருந்திக் கொண்டிருந்தாள். அவ்வாறு வருத்தப்பட்டுக் கொண்டிருக்கையில், ருக்மிணி அவ்விடம் வந்து அவள் நிலைமையைக் கவனித்து, விஷயத்தை விசாரித்தறிந்துகொண்டு அவளைத் தேற்றி, "அம்மா! நீ தீர்க்கமாக யோசித்து உனது முடிவைத் தெரிவித்துவிடு" என்றாள்.

இதைக் கேட்ட இராஜம் வருந்தியவாறு, "என்னருமைத் தாய் தந்தையர்களே! மக்களை ஈன்ற மாதா பிதாக்களுக்கு அம்மக்களால் கிடைக்கக் கூடியவை மன இன்பமும், நற்கதியுமேயாம். அப்படி யிருக்க, இருமக்களைப் பெற்ற உங்களுக்கு என்னரும்

தமக்கை ஆறாத் துயரத்தையே அளித்துச் சென்றாள். நானும் இதுவரை என் தந்தைக்கு மனவருத்தத்தையே உண்டாக்கி வந்திருக்கிறேன்; இதை நினைக்க என் மனம் வேதனை யடைகின்றது; மேலும் நான் என் தந்தை கருத்திற் கிசையாவிடில் அவர் தம்முடைய உயிர் நிலைக்காதென்றும் கூறுகின்றார்; ஆதலால், இனி அவர் மனதிற்கு வருத்தத்தை யுண்டாக்க எனக் கிஷ்டமில்லை; நான் அவர் கருத்திற் கிசைந்து நடக்கின்றேன்; ஆனால் ஒன்றை மட்டும் என் மனம் ஏற்றுக்கொள்ளாது; எனதரிய அத்தானின்மீது தற்போது ஏற்பட்டுள்ள அபாண்டமான பழிகளை மட்டும் நான் உண்மை என்று நம்பமாட்டேன்; அவருக்கு இத்தகைய துன்பம் ஏற்பட்டதற்கு யானே காரணமா யிருக்கின்றேன்; அதை மட்டும் என்னுள்ளம் ஒருபோதும் மறவாது" என்று கூறிவிட்டுப் பின்னர்க் கண்ணபிரானை நோக்கி, "தந்தாய்! தம்முடைய உயிர் நிலைக்கவேண்டியதை உத்தேசித்துத் தம்முடைய இஷ்டப்படியே நான் மணஞ் செய்துகொள்ளுகிறேன்; நீங்கள் அதற்கான ஏற்பாடு களைச் செய்யலாம்; இனி என்னால் தடை இல்லை" என்று கூறி அவ் விடத்தை விட்டுப் போய்விட்டாள்.

அவள் அவ்வாறு கூறியும் ருக்மிணி மட்டும், "நம்மகள் இதை முழுமனதோடு ஒப்புக்கொள்ளவில்லை; தன் தந்தையின் உயிர் நிலைப்பதற்காகக் கட்டாயத்தின் பேரிலேயே இந்த விவாகத் திற்கு இசைந்திருக்கிறாள்" என்று தீர்மானித்துக்கொண்டாள். எனினும் அவளால் இனி யாது செய்யக் கூடும்? அவளுக்கு முக்கியமாகத் தன் கணவனின் உயிரை நிலைக்கச் செய்வது அவசிய மாயிருந்தாலும், தன் பர்த்தா பிடித்த பிடிவாதத்தினின்றும் சிறிதும் பிறழமாட்டார் என்பது நிச்சயமாக விளங்கியதாலும் அவள் அதற் கிசைந்தவளாய், மேலே எதுவும் தடை சொல்லாமல் வாளாவிருந்துவிட்டாள்.

அப்போது கண்ணபிரான், ருக்மிணியை நோக்கி, "ருக்மிணி! நமக்குத் தற்போது விசனம் அதிகரித்திருப்பதாலும், தேக நிலைமை சரியாயில்லாததாலும் நான் இத் திருமணத்தை ஆடம்பரமாக நடத்தாமல் வெகு சாதாரணமாக நடத்தத் தீர்மானித்துவிட்டேன்;

இதைப்பற்றி ஒருவருக்கும் தெரிவிக்கப் போவதில்லை; இன்றைக்கு மூன்று நாள் முகூர்த்தம் ஏற்படுத்தப் பட்டிருக்கிறது; ஆகையினால் ஏதோ உபாயமாக வீட்டில் செய்யவேண்டுவதைச் செய்துவிடு'' என்று கூறி அவளை யனுப்பிவிட்டான். அதன்மேல் அவன், மிகுந்த பலஹீனத்தோடு இவ்வளவு நேரம் வரை பேசிக்கொண்டிருந்ததால் ஆயாசம் மேலிட்டு அப்படியே அசைவற்றுப் படுத்து விட்டான்.

அதன்மேல் முகூர்த்தம் குறிப்பிடப்பட்ட மூன்று நாளாகிய வெள்ளிக்கிழமை வந்தது. அன்று கண்ணபிரானின் பங்களாவில் அதிகக் கூட்டமின்றிக் கோவிந்த ரெட்டி வீட்டாரும், கலியாண மாப்பிள்ளை வீட்டாரும் விடியற்காலம் வந்து சேர்ந்தார்கள். அதிகமான படாடோபமும்,;பலவித வாத்திய முழக்கமு மின்றி நாகசுரம் மட்டும் வாசிக்கப்பட்டது. இராஜத்திற்கு மணக் கோலம் செய்யப்பட்டிருந்தது. ஆனால் அவள் தன் மனத்தில் அதை மணக்கோலமென்று நினைக்கவில்லை; பிணக் கோலமென்றே எண்ணி யிருந்தாள்; நகை என்பதே அவள் முகத்தில் சிறிதும் காணப்படவில்லை. அவள் குனிந்த தலையை நிமிரவு மில்லை. அவள் மனத்தில் அளவிட முடியாத துயரம் ஏற்பட்டுப் பொங்கிக் கொண்டிருந்தது; அவளுடைய நேத்திரங்களில் கண்ணீர் வழிந்து ஓடிக் கொண்டே இருந்தது. அவளுடைய அத்தானின் உருவம் அவளின் அகக் கண்ணை விட்டுச் சற்றும் அகலவில்லை. இத்தகைய துயரங்களோடு அவள், "ஐயோ! அத்தான்! பாவி என்னால் உமக்கு ஏற்பட்ட துன்பத்தால் நீங்கள் வெறுப்புற்று என்னைக் கைவிட்டு விட்டீர்களே! ஆ! யான் தற்போது செல்லுமிடம் மணவறையாக எனக்குத் தோன்றவில்லையே! காளிகோயிலுக்கு அழைத்துச் செல்லும் ஆட்டுக்கடாவின் மனம்போல என் மனம் துடிக்கின்றதே!'' என்று தனக்குள் கலங்கியபடியே மணவறையி லமர்ந்தாள்.

அப்போது கண்ணபிரான் படுக்கையை விட்டு எழுந்திருக்க மாட்டாத நிலைமையி லிருந்தபடியால் அவனுக்குப் பதிலாக அவன் செய்யவேண்டிய சடங்குகள் முற்றும் கோவிந்த ரெட்டியாரே செய்து முடித்தார். குறித்த நேரத்தில் விவாகமும் வெகு ரகஸிய

மாக நடந்தேறிற்று. ருக்மிணிக்கு மனக் கவலை மாறவில்லை. அவளுடைய குழந்தையின் விருப்பப்படி மணம் நடவாமை யொன்று; தன் பதியும் தானும் கன்னிகாதானம் செய்யமாட்டாத நிலையிலிருப்பது ஒன்று; தன் மூத்த மகள் விஷயம் ஒன்று; தாமோதரனின் விசனகரமான செய்தி யொன்று; ஆக இவை யெல்லாம் ஒன்றுகூடி அவளை வருத்திக் கண்ணீர் பெருக்கிக் கொண்டே இருக்கச் செய்தன. கலியாணமாப்பிள்ளையைப் பற்றி ருக்மிணிக்கும் பூர்ண திருப்தியே யில்லை. எனினும், அவனைப்பற்றி ஒன்றும் பேசாமல், 'இது கடவுளின் செயல்' என்று எண்ணி வாளா விருந்துவிட்டாள்.

முகூர்த்தம் முதலிய எல்லாச் சடங்குகளையும் அன்று ஒரே வேளையில் கோவிந்தரெட்டியார் முதலியவர்கள் முடித்து விட்டார்கள். கோவிந்த ரெட்டியாரின் வீட்டாரும், கலியாண மாப்பிள்ளை யுடன் வந்த அவனுடைய சொந்த மனிதர்கள் சிலரும் தவிர அங்கு வேறுஇதர மனிதர் யாருமில்லை. அவர்களுக்கு மாத்திரம் விவாக போஜனம் நடத்தப்பட்டது. கண்ணபிரானின் சகோதரி கோமளம் ஊரில் இல்லாமையால் அவளை எவரும் அழைக்கவில்லை. மற்றபடி கண்ணபிரான் தனது உறவினர்களையு மழைக்கவில்லை.

அன்று இத்திருமணக் கொண்டாட்டத்தில் ராஜேஸ்வரியின் மனது எவ்விதம் வருத்தமுற்று மகிழ்ச்சி யற்று இருந்ததோ, அதே போல ருக்மிணியின் மனத்தில் சந்தோஷ மென்பதே இல்லாமல் மறைந்துவிட்டது. ராஜம் தன் பிதாவினுடைய உயிரை நிலைபெறச் செய்யக் கருதியே இம்மணத்திற்கு இசைந்தாள். அதனால் அவளுக் குண்டான மனத் துயருக் கோர் எல்லையே இல்லை. அன்று அவள் போஜனமும் உட்கொள்ளவில்லை. அவள் கவனம் முற்றும் தன்னுடைய அத்தானின் மீதே சென்று லயித்திருந்தது. அன்று மாலையில் அவள் தன்னறையில் உட் கார்ந்து தாங்கமாட்டாத மனத் துயரத்துடன் தாமோதரனுடைய புகைப் படத்தை எடுத்து வைத்து அதற்குச் சாஷ்டாங்க வணக்கம் புரிந்து எழுந்து, அதை நோக்கி, "என்னரிய அத்தான்! பாவி யான் இத்துயரமடைய என்னவிதமான பாதகம் செய்தேனே! ஐயோ! தமக்கென்று போஷித்திருந்த இவ்வுயிரையும் உடலையும் மற்றொருவருக்குக் கோத்து மணமற்ற மலர் போல சுவை யற்ற மணம் செய்ய நேர்ந்துவிட்டதே; அத்தான்! தாங்கள் கூறின புத்திமதிகளை ஏற்றுக்கொண்டதாலும், என்னைத் தாங்கள் கைவிட்டு விட்டதாலும், என் பிதாவின் உயிர் நிலைக்கும் பொருட்டாகவும் யான் இக்கடிமணத்தைச் செய்துகொண்டேன்; அத்தான்! தாங்கள்

ஊருக்குச் செல்கையில் எனக் கெழுதி யிருந்த கடிதத்தில், ‘என் கண்மணியாகிய தங்காய்! ராஜம்! உன்னை யான் என்னுயிருக் குயிராக எண்ணி உன்னையே காதலித்திருந்தும், மனைவியாக அடையும் பாக்கியத்தைப் பெறாத பாவியாகி விட்டேன்; அதனால் இப்போது உன்னை ஓர் உயரிய சோதரியாக எண்ணிவிட்டேன்; அவ்வாறு தீர்மானித்தும் இவ்வூரிலிருந்து உன்னைத் தரிசிக்கும் பாக்கியத்தைக் கூடப் பெறாமல் யான் இவ்வூரையும் உன்னையும்விட் டுச் செல்லுகின்றேன்; இவ்வாறு செல்வதானது, எனக்குத் தாங்க முடியாத விசனத்தை யுண்டாக்கக் கூடியதாக விருக்கிறது; ஐயோ! நான் இவ்வூரிலிருந்தால் உனது திருமணகாலத்தில், நீ கலி யாணவலங்காரத்துடன் கண்களுக் கினிமையாய் விளங்குவதை என் விழியாரக்கண்டு மனமகிழ்ந்து இன்புறுவேனே! அதற்கும் கொடுத்துவைக்காத பாவியாகிவிட்டேனே’ என்றுவரைந்திருந்தீரே; அதன்படியே இப்போது காரியம் நடந்துவிட்டதே! அத்தான்! மகா சண்டாளியாகிய நான் தங்கள் பக்கலிலேயே இம்மணக் கோலத் துடனமர்வேன்; அதைத் தாங்கள் கண்டு களிப்பீர்கள் என்று எண்ணி மனக் கோட்டை கட்டி, அவ் வெண்ணம் நிறைவேறாமல் பாழாய்ப் போனேனே. என் அன்பான அத்தான்! தாங்கள் இப் புகைப் படத்தின் ரூபமாகவாவது என்னைக் கண்டு ஆநந்தித்து, எனக்கு இப்பிறவிப் பிணி சடுதியில் நீங்கிவிடவேண்டு மென்றும், என் தந்தையின் பொருட்டு நான் செய்துகொண்ட இவ் விவாகத் தினால் அவர் பூரண சுகம் பெற்றுவிடவேண்டுமென்றும் ஆசீர் வாதம் செய்யுங்கள்; எனதுபிராணபதிக்குத் தீர்க்காயுளுண்டாகும்படி நான் கடவுளை வேண்டுகிறேன்; அத்தான்! தாங்களும் தங்களுக் குரிய பாவையைத் தேடி மணந்துகொள்ளுங்கள்; இனி தங்களைக் காணும் பாக்கியம் எனக்குக் கிடைக்குமோ கிடைக் காதோ? நான் நல்வினை செய்திருந்தால் தங்களைப் பார்ப்பேன்; இல்லையேல் பார்க்கமாட்டேன்” என்று அளவுகடந்த விசனத் துடன் தேம்பிப் புலம்பியவாறு அப்படத்தை எடுத்துக் கண்ணி லொற்றிக்கொண்டு மீண்டும் அதற்கு வந்தனம் செய்தாள். அவ் வமயம் திடீரென்று அங்கு யாரோ வருவது போன்ற அரவம் அவளுக்குக் கேட்டது. அதைக் கேட்டதும் அவள் திடுக்கிட்டுத் திரும்பிப்பார்த்தாள். அந்தோ! அவளுடைய மணவாளன் அங்கு வந்து அவள் சமீபத்தில் நின்றான். அவ்வாறு நிற்பதைக் கண்ட தும் அவள் தீயை மிதித்தவள் போல மனந் துடித்துவிட்டாள். கையிலிருந்த தனது அத்தானின் படத்தை மறைக்கு முபாயம் அவளுக்குத் தோன்றவில்லை. அதனால் அவள் பிரமை கொண்டு அபாரமான திகிலடைந்து விலவிலத்து நின்று விட்டாள்.

182850

ஸ்ரீமதி வை. மு. கோதைநாயகி அம்மாள்
எழுதிய அற்புதமான நாவல்கள்
(சித்திரப்படங்கள் கூடியவை)

## சண்பக விஜயம்

இதுவரையில் எழுதி வெளிவந்த நாவல்களைவிட இதில், [illegible]வரும், சிறுமியரும் உவந்து படிக்கவும், போற்றவும், படித்ததை [illegible]னைக்கவும், பிறருக்குச்சொல்லிப் புகழவும் தக்கபடி உயர்ந்த [illegible]திகளையும், உலகப்போக்கையும், கற்பின் பிரபாவத்தையும், பெரி[illegible]யாரின் பெருமையையும், நல்லோரின் நடவடிக்கைகளையும், உத்தம [illegible]குணப்பெண்களின் இலக்ஷணங்களையும் அநேக மேற்கோள்களுடன் [illegible]விளங்க வைத்திருக்கிறது.

இதில் எந்தச் சம்பவமும் ஆச்சரியத்தை யுண்டாக்கக் கூடிய[illegible]ாயும், அறிவைப் புகட்டக் கூடியதாயும், தீயவருடைய மனதைத் [illegible]ருத்தக்கூடிய வகையிலும் சிறந்து நிற்கும். விலை ரூ. 1-12.0.

நமது சந்தா நேயர்கட்கு ரூ. 1-8-0.

## வைதேகி

இதில் கதா நாயகியின் மன உறுதி, கற்பின் மாட்சி, உன்னத [illegible]குணங்களின்உயர்ச்சி முதலியனவும் கதாநாயகி நாயகருடைய தெய்[illegible]கக் காதலின் இலக்ஷணம், கீரைக்கார காமாக்ஷியின் உயரிய குணங்[illegible]கள், துப்பறிபவரின் திறமையும், லொள்ளுதுரை, லோகாற்புதம் [illegible]மீந்தார், பொக்கைக் கிழவி, மார்வாடி, சாரங்கபாணி, ஊரளந்[illegible]தான், அடியளந்தான் முதலியவர்களின் ஹாஸ்ய விநோத அற்புதச் [illegible]செய்கைகளும் இன்னும் மற்ற ரஸங்களும் நிரம்பப் பெற்று ருசிகர[illegible]க விளங்குகின்றன. இது அநேக பத்திரிகைகளாலும் பிர[illegible]முகர்களினாலும் மதிக்கப்பெற்றது. 540-பக்கங்கொண்ட இப்புத்த[illegible]த்தின் விலை ரூபாய். 2-8-0.

நமது சந்தா நேயர்கட்கு ரூ. 2-0-0

## பத்ம சுந்தரன்

இதில் மேனாட்டு நாகரிகத்தின் ஆடம்பரமும், முடிவில் [illegible]அதனாலடையும் துன்பங்களும், பண்டைக்கால பழக்கத்தின் பெரு[illegible]மையும், கதா நாயக நாயகியின் ஒவ்வொரு அம்சத்தின் உயர்ந்த [illegible]நோக்கமும், காதலின் திறமையும், துப்பறிபவரின் விசித்திரமான [illegible]செய்கைகளும், செல்லப்பாவின் துயரமும், அவன் தன் தீயொழுக்[illegible]கத்திலிருந்து உடனே திருந்துவதும், அவனது பெற்றோரின் [illegible]நிலைமையும், மணத்தக்காளியம்மாள், சுண்டைக்காயம்மாள், அழுமூஞ்சி அண்ணாவி இவர்களின் ஹாஸ்யரஸப் பிரதானமான செய்கைளும் இன்னுமற்ற ரஸபாவங்களும் படிக்கப் படிக்க சலிப் பென்பதே தராமல் ஆநந்திக்கச்செய்யும். விலை ரூ. 2-8-0.

நமது சந்தா நேயர்கட்கு ரூ. 2-0-0

"ஜகன் மோகினி" ஆபீஸ்
26, தேரடித் தெரு, திருவல்லிக்கேணி, சென்னை.

# அமிர்தாஞ்சனம்

அமிர்தாஞ்சனம்
சர்வ நோய்களுக்கும்
ஸித்த ஔஷதம்
விலை அணா 10 ரு. 0-10-0




இருபத்தைந்து வருஷமாக
லக்ஷக்கணக்காக விற்று வருகிறது.
அபூர்வ மூலிகைகளினால் தயார் செய்யப்பட்டு
அழகாய் பாக்கிங் செய்து உபயோகத்துக்குத் தயாராய்

## எல்லா நோவுக்கும்

ஒருகைகண்ட ஔஷதம் அமிர்தாஞ்சனமே.
தலை வலி, முதுகு வலி, கீல் பிடிப்பு முதலிய
சகல நோய்களையும் நொடிப்பொழுதில்
தீர்க்கும்.

உடனே முந்துங்கள்.

**மோஹினி தைலம்.**
பாட்டில் 1-க்கு 0—12—0

**படைமருந்து**
டப்பி 1-க்கு 0—6—0

**பல்பொடி**
டப்பி 1-க்கு 0—2—0

எல்லாக் கடைகளிலும் கிடைக்கும்.

அமிர்தாஞ்சன் டிபோ,
7, தம்புச்செட்டி வீதி, சென்னை.


Published by V. M. Parthasarathy Iyengar,
*for* " JAGANMOHINI OFFICE "
PRINTED AT THE TATA PRESS, MADRAS.